# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2024
### The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

# விபரக் கொத்து - Information Booklet


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 3 |
| போட்டிகளுக்கான பொது விதிமுறைகள் | 4 |
| இணைப்பு 1 – வயதுப் பிரிவுகள், போட்டிகளின் அட்டவணை | 16 |
| இணைப்பு 2 – விண்ணப்பப் படிவம் | 19 |
| இணைப்பு 3 – கவிதை மனனப் போட்டி பற்றிய விளக்கம் | 21 |
| இணைப்பு 4 – பேச்சுப் போட்டி பற்றிய விளக்கம் | 23 |
| இணைப்பு 4 – முன்னேற்பாடற்ற பேச்சுப் போட்டி பற்றிய விளக்கம் | 23 |
| இணைப்பு 5 – வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி பற்றிய விளக்கம் | 27 |
| இணைப்பு 6 – எழுத்தறிவுப் போட்டி பற்றிய விளக்கம் | 29 |
| இணைப்பு 7 – விவாதப் போட்டி பற்றிய விளக்கம் | 31 |
| இணைப்பு 8 – வினாடி - வினாப் போட்டி பற்றிய விளக்கம் | 32 |
| இணைப்பு 9 – தனி நடிப்புப் போட்டி பற்றிய விளக்கம் | 33 |
| இணைப்பு 10,11,12 – கவிதை மனனப் போட்டிகளுக்கான கவிதைகள் | 34 |
| இணைப்பு 13,14 – ஆத்திசூடி போட்டிகளுக்கான ஆத்திசூடிகள் | 37 |
| இணைப்பு 15,16 – திருக்குறள் போட்டிகளுக்கான திருக்குறள்கள் | 39 |
| இணைப்பு 17,18,19 – பேச்சுப் போட்டிகளுக்கான விடயங்கள் | 42 |
| இணைப்பு 20 – போட்டிகள் பற்றிய உங்களின் கருத்தைத் தெரிவிப்பதற்குரிய படிவம் | 45 |
| இணைப்பு 21 – போட்டிகளுக்கான பரிசுகள் நன்கொடைகள் வழங்குவதற்கான படிவம் | 46 |


**CO-ORDINATORS:**


| | | | |
|---|---|---|---|
| National Coordinator | | Mr. K. Sivasuthan | **0403 474 145** |
| Writing Exam Coordinator | | Mr. Sri Gowrythasan | **0408 647 056** |
| NSW | (Sydney) | Mr. Pakeerathan Sivabalan | **0401 354 030** |
| VIC | (Melbourne) | Mr. Sanchayan Sriskandarajah | **0450 351 060** |
| ACT | (Canberra) | Mrs. Shyamala Durvasan | **0404 034 253** |
| QLD | (Brisbane) | Mr. T.Yogeswaran | **0422 457 593** |
| SA | (Adelaide) | Mr. Raj Srithar | **0406 628 634** |
| WA | (Perth) | Mr Nanthagoban Rajeskanthan | **0499 080 074** |
| TAS | (Tasmania) | Mr. Sivapragasam Vijayalayan | **0401 753 123** |
| Auckland (New Zealand) | | Mr. S.Gowrisankar | **+64 27 661 1886** |
| Wellington (New Zealand) | | Mr. S.Thayaparan | **+64 22 427 9382** |

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2024
## The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

### தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் நடைபெறும் முக்கிய திகதிகளும் தொடர்பாளர்களின் விபரங்களும்.

### தேசியப் போட்டிகள்

28 செப்டெம்பர் 2024 **சிட்னியில் தேசியப் போட்டிகள்** நடைபெறும்.
29 செப்டெம்பர் 2024 **சிட்னியில்** பரிசளிப்பு விழா
(நியூ சவுத் வேல்ஸ் மாநிலம் + தேசியப் போட்டிகள்)

### மாநிலப் போட்டிகள்

16 ஜூன், 2024 - இளைஞர் பிரிவுக்கான எழுத்தறிவுப் போட்டி (HSC / VCE மாதிரிப் பரீட்சை)
04 ஆகஸ்ட், 2024 - ஏனைய பிரிவுகளுக்கான எழுத்தறிவுப் போட்டிகள்

| மாநிலம் | விண்ணப்ப முடிவுத் திகதி | எழுத்தறிவு தவிர்ந்த ஏனைய போட்டிகள் | மாநிலப் பரிசளிப்பு விழா | தொடர்புகளுக்கு |
|---|---|---|---|---|
| நியூசவுத் வேல்ஸ் | எழுத்துப் பரிட்சை (இளைஞர் பிரிவு) 09 ஜூன்<br>ஏனைய போட்டிகள் 21 ஜுலை | 4, 11, 18, 25 ஆகஸ்ட் | 29 செப்டெம்பர் 2024 | 0432 260 737<br>asogt.tc.nsw@gmail.com |
| விக்டோரியா | 26 மே | 13, 14 ஜுலை<br>04 ஆகஸ்ட் | 01 டிசம்பர் 2024 | 0413 734 724<br>vic@tamilcompetition.org.au |
| அவுஸ்திரேலிய தலைநகர மண்டலம் | பின்னர் அறிவிக்கப்படும | பின்னர் அறிவிக்கப்படும | பின்னர் அறிவிக்கப்படும | 0404 034 253<br>asogt.tc.act@gmail.com |
| குயின்ஸ்லாந்து | பின்னர் அறிவிக்கப்படும | பின்னர் அறிவிக்கப்படும | பின்னர் அறிவிக்கப்படும். | 0422 457 593<br>asogt.tc.qld@gmail.com |
| தெற்கு அவுஸ்திரேலியா | பின்னர் அறிவிக்கப்படும். | பின்னர் அறிவிக்கப்படும். | பின்னர் அறிவிக்கப்படும். | 0406 628 634<br>asogt.tc.sa@gmail.com |
| மேற்கு அவுஸ்திரேலியா | பின்னர் அறிவிக்கப்படும் | பின்னர் அறிவிக்கப்படும் | பின்னர் அறிவிக்கப்படும். | 0499 080 074<br>exams@stswa.org.au |
| தஸ்மேனியா | பின்னர் அறிவிக்கப்படும் | பின்னர் அறிவிக்கப்படும் | பின்னர் அறிவிக்கப்படும் | 0401 753 123 |
| ஒக்லாண்ட் நியூசிலாந்து | பின்னர் அறிவிக்கப்படும | பின்னர் அறிவிக்கப்படும | பின்னர் அறிவிக்கப்படும | +64 27 661 1886 |
| வெலிங்டன், நியூசிலாந்து | பின்னர் அறிவிக்கப்படும் | பின்னர் அறிவிக்கப்படும் | பின்னர் அறிவிக்கப்படும். | +64 22 427 9382 |

தேசிய இணைப்பகத் தொடர்புகள்:
0403 474 145, 0433 088 725, 0402 792 475
national@tamilcompetition.org.au

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2024

ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் தமிழை நேசிக்கும் தலைமுறைகளின் உருவாக்கத்துக்கு வழிசமைக்க, அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படுகின்ற "தமிழ் ஊக்குவிப்பு போட்டிகள்" இவ்வருடம் மூன்று தசாப்தங்களைத் தாண்டிப் பயணிக்கின்றது. கடந்த முப்பது வருடங்களாக, ஆஸ்திரேலிய கண்டமெங்கும் வாழும் பல்லாயிரக்கணக்கான இளையோரை "தமிழ்" உணர்வால் இணைத்த இந்த மகத்தான பயணத்துக்கு வித்திட்டவர்களையும், வளர்ச்சிக்கு கைகொடுத்தவர்களையும் இத்தருணத்தில் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

மாநில மற்றும் தேசிய மட்டங்களில் நடாத்தப்படுகின்ற இப்போட்டிகளின் பிரதான நோக்கமாவது தமிழையும் தமிழப் பண்பாட்டையும் பேணிக் காப்பாற்றுவதோடு எதிர்வரும் சந்ததிகளுக்கும் இவற்றை எடுத்துச் செல்லக்கூடிய தலைமைத்துவப் பண்புகள் நிறைந்த இளைஞர்களை உருவாக்குவதாகும். தமிழர் வாழ்வியல் சார்ந்தோ அல்லது இளையவர்களுக்கு தெரியப்படுத்தி தெளிவுபடுத்த வேண்டிய ஒரு விடயம் சம்பந்தமாகவோ கருப்பொருளானது தெரிவு செய்யப்பட்டு ஆக்கங்கள் தயாரிக்கப்படுகின்றன. அந்த வகையில் 'தளராதிரு மனமே' என்பது இந்த வருடத்துக்கான கருப்பொருளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எம் இளைய தலைமுறையினர் எந்நிலையிலும் தளராமல் உறுதியாக இருக்க வேண்டும் என்பதை அறிவூட்டும் வகையில் கவிதைகளையும், பேச்சுக்களையும் தயார் செய்துள்ளோம். தோல்விகளைக் கண்டு தளர்ந்து போகாமல், எதிர்த்துப் போராடக் கற்றுக் கொண்டால் வாழ்க்கையின் பாதிப் பிரச்சனைகளுக்கு முடிவு கண்டு விடலாம். வாழ்க்கையில் தோல்வியோ வெற்றியோ நிரந்தரமில்லை, தோல்விகளைக் கண்டு துவண்டு போகாமல், வெற்றியைக் கண்டு நிலை தவறி நடக்காமல் எதையும் அதன் போக்கில் இயல்பாக எடுத்துக் கொண்டால், வாழ்க்கை நிதானமானதாய் இருக்கும்.

தோல்வியைக் கண்டு தளரும் போதுதான் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. தோல்வியும் ஏமாற்றமும் தரும் வலியானது மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது. மனம் தளர்கையில் தைரியமும், எதிர்த்துப் போராடும் தன்மையும், மன உறுதியும் சிதைந்து விடுகின்றன. தன்னம்பிக்கையும், விடா முயற்சியும், ஊக்கமும் இருந்து விட்டால் எவ்விடர் வரினும் எதிர்த்து நின்று விடலாம். பிரச்சனைகள் என்றும் நிரந்தரமானவை அல்ல. காலத்தின் போக்கில் நிலைமைகள் மாறி விடக்கூடியவை. தோல்வியிலிருந்து கற்றுக் கொண்ட பாடத்தை வெற்றிக்கான படிக்கல்லாக மாற்றிக் கொண்டு தொடர்ந்து முன்னேற வேண்டுமே தவிர சோர்ந்து நின்று விடலாகாது என்ற அடிப்படைப் பாடத்தை மாணவர்கள் புரிந்து கொள்ள இந்த வருடத்துக்கான ஆக்கங்கள் துணை புரியும் என்று நம்புகின்றோம்.

அலைபாயாத மனங்கொண்ட, தன்னம்பிக்கை நிறைந்த ஒரு வருங்கால சமுதாயத்தைத் தயார் செய்ய வேண்டும் என்ற நோக்கில் தெரிவு செய்யப்பட்ட இந்த கருப்பொருளின் உள்ளார்ந்த நோக்கத்தை மாணவர்களும் பெற்றோர்களும், புரிந்து கொண்டு தம்மைத் தயார் செய்ய வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

எமது போட்டிகளுக்கான விதிமுறைகளைக் கவனமாக வாசித்து அறியவும். அதன் பின்னரே போட்டிகளிலே பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யவேண்டும். எமது போட்டிகளுக்கான விதிமுறைகளும் மற்றைய விபரங்களும் இந்த விபரக் கொத்தில் அடங்கியுள்ளன. போட்டிக்கு எமது இணையத்தினுடாக விண்ணப்பிக்கலாம்.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் பற்றிய அனைத்து விபரங்களையும் எமது சங்கத்தின் இணையத் தளமான www.tamilcompetition.org.au இலே பெற்றுக் கொள்ளலாம். காலத்தின் தேவையாய் அமையும் இப்போட்டிகளிலே தமிழ் இளையோர் பெருமளவிலே பங்குபற்றித் தங்களின் தமிழ் ஆற்றலை வளர்த்திட எம் வாழ்த்துகள்.

**கு. சிவசுதன்**
**தேசிய இணைப்பாளர், தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள்.**

## போட்டிகளிற் பங்குபற்றுவதற்கான பொது விதிமுறைகளும் தகுதிகளும்

### 1. போட்டிகளுக்கான பொது விபரங்கள்

1.1. அவுஸ்திரேலியத் தமிழ்ப்பட்டதாரிகள் சங்கம் நடாத்திவரும் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளில் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் வாழுகின்ற தமிழ்ச் சிறார்களும் இளைஞர்களும் பங்குபற்றலாம்.

1.2. போட்டியாளர்கள் போட்டிக்கான விண்ணப்பங்களை எமது இணையத் தளத்தினுடாக (https://www.tamilcompetition.org.au/comp/login) சமர்ப்பிப்பது விரும்பத்தக்கது.

1.3. விண்ணப்பங்கள் மின்னஞ்சல் மூலமாகவும் உங்கள் மாநில இணைப்பாளர்களுக்கு அனுப்பப்படலாம்.

1.4. தமிழ்க் கல்வி நிலையங்கள் இயங்கின், மாணவர்கள் போட்டிகளிற் பங்குபற்றுவதற்கான தமது விண்ணப்பங்களை அவர்களின் தமிழ்க் கல்வி நிலையங்களுக்கூடாகவும் அனுப்பி வைக்கலாம்.

1.5. **போட்டிகள் பற்றிய விளக்கம்:** கவிதை மனனப் போட்டி, வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி, எழுத்தறிவுப் போட்டி, அடிப்படை எழுத்தறிவுப் போட்டி, பேச்சுப் போட்டி, விவாதப் போட்டி, வினாடிவினாப் போட்டி, தனிநடிப்பு ஆகிய போட்டிகளில் நாம் எதிர்பார்க்கும் திறமைகள், மதிப்பீடு செய்யும் முறை என்பன பற்றிய விளக்கங்கள் இதிலே வழங்கப்பட்டுள்ளன (இணைப்பு 2 – 11ஐப் பார்க்கவும்). அந்த வகையில் நடுவர்களின் மதிப்பீடு அமைந்திருக்கும். இந்தப் போட்டிகள் பற்றிய மேலதிக விளக்கங்களை எம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். கவிதை மனனப் போட்டிக்கான கவிதைகளும், பேச்சுப் போட்டிக்கான பேச்சுக்களும் இணைப்பு 11 - 12 இல் வழங்கப்பட்டுள்ளன.

1.6. எதிர்பாராத விதமாக மாநிலங்களில் நோய்ப்பரவலால் போட்டிகளை நேருக்கு நேர் நிகழ்வாக நடாத்த முடியாத சூழ்நிலை ஏற்படின், போட்டிகள் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் இணையவழிமூலம் நடாத்தப்படும். சூழ்நிலைகளுக்கேற்ற வகையில் போட்டிகள் குறித்து இறுதி முடிவுகளை மாநில இணைப்பாளர்கள் இணைந்து எடுப்பார்கள். தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்படின், தேசியப் போட்டி நடைபெறாது.

### 2. வயதுப் பிரிவுகள்

2.1. 25 வயதிற்குட்பட்ட தமிழ்ச் சிறார்களும் இளைஞர்களும் ஏழு வகையான (வயதுப்) பிரிவுகளில் எட்டு விதமான போட்டிகளிற் பங்குபற்றலாம்..

2.2. **போட்டியாளரின் வயது 01-07-2024 அன்று உள்ளபடி கணிக்கப்படும்.**

2.3. இந்த ஆண்டுக்கான வயதுப் பிரிவுகளும் போட்டி வகைகளும் இணைப்பு-1 இல் தரப்பட்டுள்ளன.

2.4. போட்டியாளர்கள் தங்கள் வயதுப் பிரிவிற்கான எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றலாம். குறித்த ஒரு போட்டி, போட்டியாளரின் பிரிவில் நடைபெற்றாலும், அவர் தமது வயதுப் பிரிவிலும் பார்க்கக் கூடிய வயதுப் பிரிவில் நடைபெறும் அப்போட்டியில் பங்குபற்றலாம். மேற்குறிப்பிட்ட விதிகளுக்கமையக் குறித்த ஒரு போட்டியில், போட்டியாளர் ஏதாவது ஒரு வயதுப் பிரிவில் மட்டுமே பங்குபற்றலாம். போட்டியாளர் ஒரு எழுத்தறிவுப் போட்டியில் மட்டுமே பங்குபற்றலாம்.

2.5. எழுத்தறிவுப் போட்டி தவிர்ந்த ஏனைய போட்டிகளில் குறித்த வயதுப்பிரிவில் பதினைந்திற்கும் மேற்பட்ட ஆண்களோ அல்லது பெண்களோ தோற்றும்பட்சத்தில், அந்தப் போட்டி ஆண் - பெண் என இரு பிரிவுகளில் நடாத்தப்படும். இப்படி ஆண்-பெண் பிரிவிலான போட்டிகள் நடைபெறுவது போட்டி நாள் அன்றோ அல்லது இயலுமானால் முன்கூட்டியோ அறிவிக்கப்படும். மேலும் இவ்வாறு பிரிக்கப்பட்ட போட்டி ஒன்றில் அதிகமான ஆண்களோ அல்லது பெண்களோ பங்குபற்றுமிடத்து, தேசிய போட்டிகள் அரை இறுதிப் போட்டி இறுதிப் போட்டி என்ற இரு சுற்றுக்களில் நடைபெறும். தேசிய நிலையில் நடைபெறாத மற்றைய போட்டிகள் வயதின் அடிப்படையில் மேலும் இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுப் போட்டிகள் நடைபெறும். கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை, போட்டிக்கு வருகை தரும் மாணவர்களின் எண்ணிக்கை என்பனவற்றைக் கொண்டு நிர்வாகக் குழு இதுபற்றிய முடிவை எடுக்கும்.

## 3. போட்டிகளின் வகைகள்

3.1 தனியொருவர் கலந்து கொள்ளும் **சாதாரண பிரிவுக்கான போட்டிகள்**:

- கவிதை மனனப் போட்டி
- பேச்சுப் போட்டி
- எழுத்தறிவுப் போட்டி
- அடிப்படை எழுத்தறிவுப் போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி

3.2 தனியொருவர் கலந்து கொள்ளும் **விசேட பிரிவிற்கான போட்டிகள்**:

- விசேட எழுத்தறிவுப் போட்டி.
- விசேட தனி நடிப்புப் போட்டி.
- விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி).
- விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்).
- விசேட முன்னேற்பாடற்ற பேச்சுப் போட்டி

3.3 **குழுநிலையில் நடைபெறும் போட்டிகள்**

- விவாதப் போட்டி
- வினாடிவினாப் போட்டி

3.4 மேற்குறிப்பிட்ட போட்டி வகைகளிற் சில போட்டிகளே அந்தந்த வயதுப் பிரிவில் நடாத்தப்பட இருப்பதனால், தயவு செய்து **இணைப்பு-1** ஐப் பார்க்கவும்.

3.5 **போட்டிகள் பற்றிய விளக்கம்**: கவிதை மனனப் போட்டி, வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி, எழுத்தறிவுப் போட்டி, அடிப்படை எழுத்தறிவுப் போட்டி, பேச்சுப் போட்டி, விவாதப் போட்டி, வினாடிவினா, தனிநடிப்பு ஆகிய போட்டிகளில் நாம் எதிர்பார்க்கும் திறமைகள், மதிப்பீடு செய்யப்படும் முறைகள் என்பன பற்றிய விளக்கமும் வழங்கப்பட்டுள்ளது (இணைப்பு 2 – 11ஐப் பார்க்கவும்). அந்த வகையில் நடுவர்களின் மதிப்பீடு அமைந்திருக்கும். இந்தப் போட்டிகள் பற்றிய மேலதிக விளக்கங்களை எம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

3.6 போட்டியாளர்கள் ஒரு எழுத்தறிவுப் போட்டியில் (எழுத்தறிவுப் போட்டி அல்லது அடிப்படை எழுத்தறிவுப் போட்டி அல்லது (விசேட) அடிப்படை தமிழார்வ எழுத்தறிவுத் தேர்வு) மட்டுமே பங்குபற்ற முடியும்.

3.7 கடந்த வருடங்களில் நடைபெற்ற எழுத்தறிவுப் போட்டிகளின் வினாத்தாள்களை எமது இணையத்தளத்திலிருந்து (www.tamilcompetition.org.au) பெற்றுக் கொள்ளலாம்.

3.8 வாய்மொழித்தொடர்பாற்றலின் மாதிரி வினாத்தாள்களை எமது இணையத்தளத்திலிருந்து (www.tamilcompetition.org.au) பெற்றுக் கொள்ளலாம்.

## 4. வயதுப் பிரிவுகளும் போட்டிகளும்

வயதுப் பிரிவுகளும் போட்டிகளும் இணைப்பு 1 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

4.1. **பாலர் பிரிவு:** 5 வயதிற்குட்பட்டோர் (01.07.2019க்குப் பின்பிறந்தோர்)

- கவிதை மனனப் போட்டி – சாதாரண போட்டி
- கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – விசேட போட்டி

4.2. **ஆரம்பப் பிரிவு:** 5 வயதுடையோர் (01.07.2018 இற்கும் 30.06.2019 இற்கும் இடையிற் பிறந்தோர்)

- கவிதை மனனப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி
- கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – விசேட போட்டி)

4.3. **கீழ்ப் பிரிவு:** 6-7 வயதுடையோர் (01.07.2016 இற்கும் 30.06.2018 இற்கும் இடையிற் பிறந்தோர்)

- கவிதை மனனப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி
- எழுத்தறிவுப் போட்டி – விசேட போட்டி (8 வயதிற்குட்பட்டோர் பிரிவில்)

4.4. **மத்திய பிரிவு:** 8-9 வயதுடையோர் (01.07.2014 இற்கும் 30.06.2016 இற்கும் இடையிற் பிறந்தோர்)

- எழுத்தறிவுப் போட்டி – சாதாரண போட்டி
- அடிப்படை எழுத்தறிவுப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி
- பேச்சுப் போட்டி – சாதாரண போட்டி
- கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – விசேட போட்டி
- தனி நடிப்பு – விசேட போட்டி (12 வயதிற்குட்பட்டோர் பிரிவில்)

4.5. **மேற்பிரிவு:**10-11 வயதுடையோர் (01.07.2012 இற்கும் 30.06.2014 இற்கும் இடையிற் பிறந்தோர்)

- எழுத்தறிவுப் போட்டி – சாதாரண போட்டி
- அடிப்படை எழுத்தறிவுப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி
- பேச்சுப் போட்டி – சாதாரண போட்டி
- கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – விசேட போட்டி (15 வயதிற்குட்பட்டோர் பிரிவில்)
- தனி நடிப்பு – விசேட போட்டி (12 வயதிற்குட்பட்டோர் பிரிவில்)

4.6. **அதிமேற்பிரிவு:** 12-14 வயதுடையோர் (01.07.2009 இற்கும் 30.06.2012 இற்கும் இடையிற் பிறந்தோர்)

- எழுத்தறிவுப் போட்டி – சாதாரண போட்டி
- அடிப்படை எழுத்தறிவுப் போட்டி – சாதாரண போட்டி
- பேச்சுப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி
- கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – விசேட போட்டி (15 வயதிற்குட்பட்டோர் பிரிவில்)
- விவாதப் போட்டி – குழுநிலைப் போட்டி (18 வயதிற்குட்பட்டோர் பிரிவில்)
- வினாடி வினாப் போட்டி – குழுநிலைப் போட்டி (15 வயதிற்குட்பட்டோர்)
- பல்திறன் போட்டி – விசேட குழுநிலைப் போட்டி (18 வயதிற்குட்பட்டோர்)

4.7. **இளைஞர் பிரிவு:** 15-17 வயதுடையோர் (01.07.2006 இற்கும் 30.06.2009 இற்கும் இடையிற் பிறந்தோர்).

- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி - சாதாரண போட்டி
- எழுத்தறிவுப் போட்டி - விசேட போட்டி (18 வயதிற்குட்பட்டோர்)
- விவாதப் போட்டி - குழுநிலைப் போட்டி (18 வயதிற்குட்பட்டோர்)
- வினாடி வினாப் போட்டி - குழுநிலைப் போட்டி (18 வயதிற்குட்பட்டோர்)
- விசேட முன்னேற்பாடற்ற (impromptu) பேச்சுப் போட்டி (25 வயதிற்குட்பட்டோர்)

4.8. **விசேட இளைஞர் பிரிவு:** 25 வயதிற்குட்பட்டோர் (01.07.1998 இற்குப்பின் பிறந்தோர்)

- விசேட முன்னேற்பாடற்ற (impromptu) பேச்சுப் போட்டி (25 வயதிற்குட்பட்டோர்)

## 5. அண்மையில் அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்திற் குடியேறிய போட்டியாளர்களின் கவனத்திற்கு

5.1. நீங்கள் கடந்த சில ஆண்டுகளுக்குள், இலங்கையில் அல்லது இந்தியாவில் (தமிழ் முதல் மொழி) இருந்து அவுஸ்திரேலியா நியூசிலாந்து நாடுகளுக்குக் குடிபெயர்ந்தவராக இருந்தால் **அல்லது** இலங்கை, இந்தியா தவிர்ந்த வேறு நாடுகளில் (அவுஸ்திரேலியா நியூசிலாந்து உட்பட) பிறந்து பின் இலங்கையில் அல்லது இந்தியாவில் வசித்திருந்தால், பின்வரும் விதிமுறைகளிற்கு அமையப் போட்டிகளிற் பங்குபற்றலாம்.

- **பாலர் பிரிவு:** 5 வயதிற்குட்பட்டோர் (01.07.2019க்குப்பின் பிறந்தோர்)
  புலம்பெயர்ந்து கடந்த **ஒரு வருடமாவது** அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்தில் அல்லது பிறநாடுகளில் (இலங்கை, இந்தியா தவிர்ந்த) வசித்து இருந்தால் மட்டுமே சாதாரண பிரிவுகளுக்கென நடைபெறும் போட்டிகளிற் கலந்து கொண்டு முதல் மூன்று பரிசில்களில் ஒன்றைப் பெறமுடியும்.

- **ஆரம்பப் பிரிவு:** 5 வயதுடையோர் (01.07.2018 இற்கும் 30.06.2019 இற்கும் இடையில் பிறந்தோர்)
  புலம்பெயர்ந்து கடந்த **இரண்டு வருடமாவது** அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்தில் அல்லது பிறநாடுகளில் (இலங்கை, இந்தியா தவிர்ந்த) வசித்து இருந்தால் மட்டுமே சாதாரண பிரிவுகளுக்கென நடைபெறும் தனிப்பட்ட போட்டிகளிற் கலந்து கொண்டு முதல் மூன்று பரிசில்களில் ஒன்றைப் பெறமுடியும்.

- **ஏனைய பிரிவினர்:** 6 - 17 வயதுடையோர் (01.07.2006 இற்கும் 30.06.2018 இற்கும் இடையிற் பிறந்தோர்)
  புலம்பெயர்ந்து கடந்த **மூன்று வருடமாவது** அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்தில் அல்லது பிறநாடுகளில் (இலங்கை, இந்தியா தவிர்ந்த) வசித்து இருந்தால் மட்டுமே சாதாரண பிரிவுகளுக்கென நடைபெறும் தனிப்பட்ட போட்டிகளிற் கலந்து கலந்து கொண்டு முதல் மூன்று பரிசில்களில் ஒன்றைப் பெறமுடியும்.

5.2. போட்டியாளர்கள் அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் குடியேறிய நாள் **01-07-2024** இல் உள்ளபடி கணிக்கப்படும்.

5.3. இவ்விதியைச் சார்ந்து போட்டியாளரின் தகைமையை நிர்ணயிக்கும் முழு உரிமையும் நிர்வாகக்குழுவிற்கு இருக்கின்றது. இவ்விடயத்தில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிக் குழுவின் முடிவே இறுதியானது.

5.4. விசேட போட்டிகளிலும் குழு நிலைப் போட்டிகளிலும் பங்குபற்றும் போட்டியாளர்கள் அண்மையில் அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்திற் குடியேறினாலும் முதல் மூன்று பரிசில்களில் ஒன்றைப் பெறமுடியும்.

## 6. 2023ம் ஆண்டு மாநிலப் போட்டிகளில் முதற் பரிசு பெற்ற போட்டியாளர்கள் கவனத்திற்கு

2023ம் ஆண்டு தேசிய நிலையில் நடைபெற்ற போட்டிகளில் முதற்பரிசை (அதாவது தங்கப் பதக்கம்) பெற்றவர்கள் இந்த ஆண்டு அதே போட்டிகளில் மாநில நிலையில் தனது குறித்த வயதுப் பிரிவிலேயோ அல்லது கூடிய வயதுப் பிரிவிலேயோ பங்குபற்ற முடியும். எனினும் இப்போட்டியாளருக்கு முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் பரிசுகள் வழங்கப் படமாட்டாது. பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றைய பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். இப்போட்டியாளர் தேசிய நிலையில் அதே போட்டியில் இந்த வருடம் பங்குபற்ற முடியாது. எனினும் 2023ம் ஆண்டு கீழ்ப்பிரிவிற்கான கவிதை மனனப் போட்டியில் தேசிய நிலையில் முதற்பரிசை (அதாவது தங்கப் பதக்கம்) பெற்ற போட்டியாளர் மத்திய பிரிவிற்கான விசேட கவிதை மனனப் (திருக்குறள்) போட்டியிற் கலந்து கொண்டு மாநில நிலையில் முதல் மூன்று இடங்களுக்கான எந்தப் பரிசிற்கும் போட்டியிட முடியும்.

6.1. மாநில நிலையில் நடைபெற்ற 2023ம் ஆண்டு பாலர் பிரிவிற்கான, அல்லது ஆரம்ப பிரிவிற்கான கவிதை மனனப் போட்டிகளில் முதற் பரிசு பெற்ற மாணவர்கள் தேசிய நிலையில் நடைபெறாத கவிதை மனனப் போட்டிகளில் மீண்டும் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள். எனினும் இப் போட்டியாளர்களுக்கு முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் பரிசுகள் வழங்கப்படமாட்டாது. பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றைய பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். ஆனால் கீழ்ப்பிரிவிற்கான கவிதை மனனப் போட்டியிற் கலந்து கொண்டு மாநில நிலையில் முதல் மூன்று இடங்களுக்கான எந்தப் பரிசிற்கும் போட்டியிட முடியும் மற்றும் தேசியப் போட்டிகளிற்குத் தெரிவு செய்யப்பட்டு எந்தப் பரிசையும் வெல்ல முடியும்.

6.2. மாநில நிலையில் நடைபெற்ற 2023ம் ஆண்டு மத்திய பிரிவிற்கான விசேட கவிதை மனனப் போட்டியில் (திருக்குறள்) முதற் பரிசு பெற்ற போட்டியாளர்கள், அதிமேற் பிரிவிற்கான விசேட கவிதை மனனப் (திருக்குறள்) போட்டியிற் கலந்து கொண்டு மாநில நிலையில் முதல் மூன்று இடங்களுக்கான எந்தப் பரிசிற்கும் போட்டியிட முடியும் மற்றும் தேசியப் போட்டிகளிற்குத் தெரிவு செய்யப்பட்டு எந்தப் பரிசையும் வெல்ல முடியும்.

6.3. வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் எந்த வயதுப் பிரிவிலேனும் 2023ம் ஆண்டு மாநில நிலையில் முதலாவது பரிசைப் பெற்ற போட்டியாளர் இந்த ஆண்டு வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியிலே தனது குறித்த வயதுப் பிரிவிலேயோ அல்லது கூடிய வயதுப் பிரிவிலேயோ பங்குபற்ற முடியும். எனினும் இப் போட்டியாளருக்கு முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் பரிசுகள் வழங்கப் படமாட்டாது. பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றைய பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

6.4. மாநில நிலையில் நடைபெற்ற 2023ம் ஆண்டு பாலர், ஆரம்பப் பிரிவிற்கான விசேட கவிதை மனனப் போட்டியில் (ஆத்திசூடி) முதற் பரிசு பெற்ற போட்டியாளர்கள், இந்த ஆண்டு வயதின் அடிப்படையில் விசேட கவிதை மனனப் போட்டியிற் (ஆத்திசூடி) பங்குபற்ற முடியும். எனினும் இப் போட்டியாளருக்கு முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் பரிசுகள் வழங்கப் படமாட்டாது. பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றைய பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

6.5. விசேட கவிதை மனனம் (திருக்குறள்), விசேட கவிதை மனனம் (ஆத்திசூடி) மற்றும் கவிதை மனனப் போட்டிகள் ஒவ்வொன்றும் வேறுவகைப் போட்டிகளாக எடுத்துக்கொள்ளப்படும். ஒரு போட்டியில் முதற்பரிசு பெற்ற போட்டியாளர் ஏனைய போட்டிகளில் முதல் மூன்று இடங்களுக்கான எந்தப் பரிசிற்கும் போட்டியிட முடியும்.

6.6. அடிப்படை எழுத்தறிவுப் போட்டியில் எந்த வயதுப் பிரிவிலேனும் 2023ம் ஆண்டு மாநில நிலையில் முதலாவது பரிசைப் பெற்ற போட்டியாளர் இந்த ஆண்டு அடிப்படை எழுத்தறிவுப் போட்டியிலே தனது குறித்த வயதுப் பிரிவிலேயோ அல்லது கூடிய வயதுப் பிரிவிலேயோ பங்குபற்ற முடியும். எனினும் இப் போட்டியாளருக்கு முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் பரிசுகள் வழங்கப்படமாட்டாது. பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றைய பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். இப்போட்டியாளர்கள் சாதாரண எழுத்தறிவுப் போட்டியிற் கலந்து கொண்டு மாநில நிலையில் முதல் மூன்று இடங்களுக்கான எந்தப் பரிசிற்கும் போட்டியிட முடியும் மற்றும் தேசியப் போட்டியிற்குத் தெரிவு செய்யப்பட்டால் எந்தப் பரிசிற்கும் போட்டியிடவும் முடியும்.

6.7. (விசேட) தனிநடிப்புப் போட்டியில் 2023ம் ஆண்டு மாநில நிலையில் முதலாவது பரிசைப் பெற்ற போட்டியாளர் இந்த ஆண்டு (விசேட) தனிநடிப்புப் போட்டியிற் பங்குபற்ற முடியும். எனினும் இப் போட்டியாளருக்கு முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் பரிசுகள் வழங்கப் படமாட்டாது. பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றைய பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

## 7. போட்டி நடைமுறைகளும் தகவல்களும்

7.1. எழுத்தறிவுப் போட்டி தவிர்ந்த ஏனைய போட்டிகளில் குறித்த வயதுப்பிரிவில் பதினைந்திற்கும் மேற்பட்ட ஆண்களோ அல்லது பெண்களோ தோற்றும்பட்சத்தில், அந்தப் போட்டி ஆண் - பெண் என இரு பிரிவுகளில் நடாத்தப்படும். இப்படி ஆண்-பெண் பிரிவிலான போட்டிகள் நடைபெறுவது போட்டி நாள் அன்றோ அல்லது இயலுமானால் முன்கூட்டியோ அறிவிக்கப்படும். மேலும் இவ்வாறு பிரிக்கப்பட்ட போட்டி ஒன்றில் அதிகமான ஆண்களோ அல்லது பெண்களோ பங்குபற்றுமிடத்து, தேசிய போட்டிகள் அரை இறுதிப் போட்டி இறுதிப் போட்டி என்ற இரு சுற்றுக்களில் நடைபெறும். தேசிய நிலையில் நடைபெறாத மற்றைய போட்டிகள் வயதின் அடிப்படையில் மேலும் இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுப் போட்டிகள் நடைபெறும். கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை, போட்டிக்கு வருகை தரும் மாணவர்களின் எண்ணிக்கை என்பனவற்றைக் கொண்டு நிர்வாகக் குழு இதுபற்றிய முடிவை எடுக்கும்.

7.2. போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.

7.3. நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு இரு கிழமைகளுக்கு முன்னதாகத் தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலிருந்தும் (www.tamilcompetition.org.au) பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறியவர்கள் மாநில இணைப்பாளருடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

7.4. போட்டிகளுக்கான கவிதை, பேச்சு, திருக்குறள், ஆத்திசூடி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் அவற்றை எமது இணையத்தளத்திலிருந்தும் (www.tamilcompetition.org) பெற்றுக் கொள்ளலாம். விசேட பேச்சுப் போட்டிக்கான தலைப்பு போட்டி அன்று 20 நிமிடங்களிற்கு முன் கொடுக்கப்படும்.

7.5. போட்டி ஆரம்பிக்கும் நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வந்து போட்டியாளரின் அனுமதிப் பத்திரத்தைக் காண்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் பொழுது தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது கடவுச் சீட்டினைக் காண்பிக்கத்தவறியோர் போட்டி ஆரம்ப நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வந்து அவற்றைக் காண்பிக்க வேண்டும்.

7.6. வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் ஆரம்ப இலக்கங்களைப் பெற்ற போட்டியாளர்களும், அவர்களது பெற்றோர்களும் போட்டி ஆரம்பமாகி 30 நிமிடங்கள் வரை போட்டி நடைபெறும் மண்டபத்திலிருந்து வெளியே செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

7.7. போட்டிகளின்போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் பார்வையாளர் எவரேனும் போட்டி நடைபெறும்போது போட்டியாளருக்கு எந்தவகையிலும் உதவிசெய்தல் ஆகாது.

7.8. போட்டிகள் நடைபெறும் போது கையடக்கத் (நடமாடும்) தொலைபேசியைப் பயன்படுத்துதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பெற்றோர் தத்தமது பிள்ளைகளின் போட்டியின் போது மட்டும் புகைப்படம், வீடியோ (ஒளிப்படம்) எடுக்கலாம், ஆனால் ஏனைய போட்டியாளர்களைப் புகைப்படம், வீடியோ (ஒளிப்படம்) எடுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

## 8. பெறுபேறுகளும் பரிசுகளும்

8.1. போட்டியின் பெறுபேறு பற்றி நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவானதாகும். இந்தப் பெறுபேறுகள் எமது பரீட்சைச் சபையினராலே சரிபார்த்தபின் இயலுமானவரை போட்டிநாள் அன்றே போட்டி மண்டபத்திற்கு வெளியேயுள்ள விளம்பரப் பலகையில் அல்லது இணையத்தளத்தில் வெளியிடப்படும். எழுத்துப் போட்டிக்கான பெறுபேறுகள் போட்டிகள் நடைபெற்று 5 வாரத்துக்குள் எமது இணையத்தளத்தில் (www.tamilcompetition.org.au) வெளியிடப்படும்.

8.2. போட்டிகளிற் பங்குபற்றி வெற்றி பெறுவோருக்கு - ஒவ்வொரு போட்டியிலும் மிகச் சிறப்பாகத் தேர்ச்சியடையும் போட்டியாளருக்கு வெற்றிக் கேடயம் பரிசாக வழங்கப்படும். இந்தப் போட்டியாளர்களுக்கு முதலாம் இடம், இரண்டாம் இடம், மூன்றாம் இடம், A நிலை, B நிலை, C நிலை என்ற வகையில் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். பரிசு பெறத்தவறியவர்களுக்குப் பங்குபற்றியதற்கான சான்றிதழ் வழங்கப்படும்.

8.3. வெற்றிபெறும் போட்டியாளர்களுக்கான பரிசில்கள் **அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின் பரிசளிப்பு விழாவில்** வழங்கப்படும். மேடைப் போட்டிகளில் முதலாவது இடத்தைப்பெற்ற திறமைமிக்க வெற்றியாளர்கள் மட்டும் மேடையில் தோன்றித் தமது திறமையை வெளிப்படுத்த அனுமதிக்கப்படுவார்கள். இதில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிக் குழுவின் முடிவே இறுதியானது.

8.4. பரிசளிப்பு விழாவிற் பங்குபற்ற முடியாதவர்கள் தங்களிற்கான பரிசில்களைத் (சான்றிதழ் / வெற்றிக் கேடயம் / சுழற் கேடயம் / புத்தகங்கள் / தங்கப்பதக்கம்) தமது உறவினர்கள், நண்பர்கள் அல்லது தமிழ்ப் பாடசாலைப் பிரதிநிதிகள் ஊடாகப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தல் வேண்டும். பரிசளிப்பு விழாவில் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள், பின்னர் தமிழ் ஊக்குவிப்புப் போட்டி குழுவினரால் அறிவிக்கப்படும் இரு தினங்களில் மட்டும் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். இதுபற்றிய அறிவித்தல் மின்னஞ்சல் ஊடாக உங்களிற்கு அறியத்தரப்படும்.

## 9. விண்ணப்பிப்பதற்குரிய விதிகள்

9.1. போட்டியாளரின் வயது, பிறந்த இடம், அவுஸ்திரேலிய, நியூசிலாந்து நாடுகளிற் குடியேறிய திகதி என்பன பற்றிய அத்தாட்சி (கடவுச் சீட்டு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்) ஆகியவை தேவைப்படின் காண்பிக்கப்பட வேண்டும். இந்த அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் அவர்கள் போட்டிகளில் அனுமதிக்கப்பட மாட்டார்கள். எமக்குக் கிடைக்கப் பெறும் இந்த விபரங்கள் அனைத்தும் இரகசியமாக வைத்திருக்கப்படும் என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

9.2. கடந்த ஆண்டுப் போட்டிகளில் சுழல் / வெற்றிக் கேடயங்கள் பெற்றவர்கள் இவ்வருடம் தத்தமது போட்டி நடைபெறும் தினத்தன்றோ அல்லது முன்னராகவோ கேடயங்களை ஒப்படைக்க வேண்டும். **இவ்வாறு கேடயங்களை ஒப்படைக்கத் தவறுபவர்கள் 2024ம் ஆண்டுப் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

9.3. உங்கள் விண்ணப்பப் படிவத்தை முழுமையாக நிரப்பாதுவிட்டாலோ அல்லது பிழையான தரவுகள் தரப்பட்டாலோ போட்டியிற் பங்குபற்ற அனுமதி மறுக்கப்படலாம் என்பதை அறியத்தருகின்றோம். எல்லாப் போட்டியாளர்களும் தமது பிறந்த திகதி, அவுஸ்திரேலியாவிற்கோ, நியூசிலாந்திற்கோ குடியேறிய திகதி ஆகிய விபரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

9.4. உங்கள் மின்னஞ்சல் விபரத்தையும், உங்களுடன் நாங்கள் தொடர்பு கொள்ளவேண்டின் நீங்கள் பெரிதும் விரும்பும் தொடர்பாடல் முறையையும் குறிப்பிடத் தவறாதீர்கள்.

9.5. விண்ணப்பித்த போட்டியாளர்கள் போட்டி நடைபெறுவதற்கு **30 நிமிடங்களுக்கு முன்னர்** வந்து தங்கள் பெயர்களைப் பொறுப்பாளர்களிடம் பதிவு செய்தல் வேண்டும். **பதிவுசெய்த போட்டியாளர்கள் மாத்திரமே போட்டிகளிற் பங்குபற்ற முடியும். போட்டிகள் ஆரம்பித்த பின்னர் போட்டியாளர்கள் எவரும் போட்டிகளுக்குப் பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

9.6. இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் **மாநில விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் மாநில இணைப்பாளரைச் சென்றடைய வேண்டும்.**

9.7. போட்டி நடைபெறும் இடம், நேரம் ஆகிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். போட்டியாளர்களும் பெற்றோரும் எமது இணையத்தளமான www.tamilcompetition.org இல் எமது அறிவுப்புகளைப் பார்க்கலாம்.

## 10. மாநிலப் போட்டிகள்

10.1. தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் அவுஸ்திரேலியாவிலும், நியூசிலாந்திலும் பல மாநிலங்களில் நடைபெறுகின்றன. இப் போட்டிகளில் மாநில நிலையிற் பங்குபற்றுப் போட்டியாளர்கள் அந்தந்த இணைப்பாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

10.2. போட்டியாளர்கள் தாம் வசிக்கும் மாநிலங்களிலே நடத்தப்படும் போட்டிகளிற் கலந்து கொண்டு பின்னர் தேசியப் போட்டிகளுக்குத் தெரிவாகும் வாய்ப்பைப் பெறுவர்.

10.3. தெரிவு செய்யப்பட்ட போட்டிகள் மட்டுமே ஒவ்வொரு மாநிலத்திலும் நடைபெறுவதனால், உங்கள் மாநிலத்திற்கான போட்டியின் உபகுழுவுடனோ மாநில இணைப்பாளருடனோ அல்லது எமது பிரதிநிதிகளுடனோ தொடர்பு கொள்ளலாம்.

10.4. போட்டிகளுக்கு விண்ணப்பித்த போட்டியாளர்களுக்கு அந்த மாநிலப் போட்டிகளின் நேர அட்டவணை அனுப்பி வைக்கப்படும்.

## 11.0 தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகள்

11.1. கவிதை மனனப் போட்டி - கீழ்ப் பிரிவு, பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு, பேச்சுப் போட்டி - மேற்பிரிவு, பேச்சுப் போட்டி - அதிமேற் பிரிவு, விசேட எழுத்தறிவுப் போட்டி - கீழ்ப் பிரிவு, எழுத்தறிவுப் போட்டி - மத்திய பிரிவு, எழுத்தறிவுப் போட்டி - மேற்பிரிவு, எழுத்தறிவுப் போட்டி - அதிமேற் பிரிவு, விசேட கவிதைமனனப் போட்டி(திருக்குறள்) - மத்திய பிரிவு மற்றும் விசேட கவிதைமனனப் போட்டி (திருக்குறள்) - அதிமேற் பிரிவு ஆகிய போட்டிகளை மாநில மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் நடாத்த முயற்சிப்போம். மாநிலப் போட்டிகளிற் பங்கேற்கும் மாணவர்களின் தொகையே இதனைத் தீர்மானிக்கும். ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று பரிசுகளைப் பெறும் போட்டியாளர்கள் மட்டும் தேசியப் போட்டிக்கு அனுமதிக்கப்படுவார்கள். இவர்களாற் தேசியப் போட்டியிற் கலந்துகொள்ள முடியாதவிடத்து அடுத்துவரும் வெற்றியாளர்களுக்கு இச்சந்தர்ப்பம் வழங்கப்படும். மாநிலப் போட்டிகள் முடிந்த நிலையில் எத்தனை பேர் எந்தெந்தப் பிரிவுகளுக்கான போட்டிகளிலே தேசிய மட்டத்தில் அனுமதிக்கப்படுவார்கள் என்பது தெரிவிக்கப்படும்.

11.2. தேசியப் போட்டி ஒன்றில் அதிகமான மாணவர்கள் பங்குபற்றுமிடத்து போட்டி அரை இறுதிப் போட்டி, இறுதிப் போட்டி என்ற இரு சுற்றுக்களில் நடைபெறும். நிர்வாகக் குழுவே இதுபற்றிய முடிவை எடுக்கும்.

11.3. தேசியநிலையில் நடைபெறும் கவிதை மனனப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் சனிக்கிழமை, 30ம் திகதி செப்டெம்பர் மாதம் 2024 இல் சிட்னியில் நடைபெறும். சிட்னியில் தேசியப் போட்டிகளிற் பங்குபற்றும் மாணவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையிலே தேசிய தமிழ் வானொலிகளில் அவர்கள் பங்களிப்புச் செய்ய வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

11.4. தேசிய மட்டத்தில் முதற் பரிசு பெறும் போட்டியாளருக்குத் தங்கப் பதக்கம் பரிசளிக்கப்படும். தேசிய மட்டத்திற் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்களும், சான்றிதழ்களும் இவ்வாண்டு 01ம் திகதி ஒக்டோபர் மாதம் 2024 இல் சிட்னியில் நடைபெறும் எமது பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும்.

## 12. போட்டிகளின் நேர அட்டவணை:

போட்டிகளுக்கான நேர அட்டவணை இங்கு கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு போட்டியிலும் எத்தனை மாணவர்கள் தோற்றுவார்கள் என்ற விபரம் கிடைக்கப் பெற்ற பின்னரே அதாவது விண்ணப்ப முடிவு திகதியின் பின்னரே போட்டிகளுகான நேர அட்டவணை மின்னஞ்சல் முகவரி தந்த விண்ணப்பதாரர்களுக்கும்,தமிழ்ப் பாடசாலைகளுக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். இந்தப் போட்டிகளுக்கான நேர அட்டவணையை எமது இணையத்தளத்தில் இருந்தும் (**www.tamilcompetition.org.au**) பெற்றுக் கொள்ளலாம். போட்டிகளுக்கான நேர அட்டவணையை மாநிலப் போட்டி தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன் பெறத் தவறியோர் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். போட்டிகளுக்கு முன்னர் இந்த நேர அட்டவணையைத் தெரிந்திருப்பது உங்கள் பொறுப்பு ஆகும்.

## 13. பரீட்சைச் சபை

13.1. கடந்த சில வருடங்களாக நாம் பரீட்சைச் சபை ஒன்றை நியமித்துள்ளோம். அதிலே தமிழ் அறிஞர்கள் பலர் மாநிலங்களில் இருந்து அங்கம் வகிக்கின்றனர்.

13.2. பரீட்சைச் சபையினர் இந்தப் போட்டிகளைக் கண்காணித்து நிர்வாகக் குழுவிற்குப் பரிந்துரைகள் வழங்குவார்கள். அத்துடன் அவர்கள் பெறுபேறுகளை ஆராய்ந்து சரியான முடிவுகளை எடுக்க உதவுவதுடன் இறுதி முடிவுகளையும் உறுதி செய்வார்கள்.

## 14. போட்டிகளுக்கான அனுமதிக் கட்டணம்:

14.1. இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக் கேடயங்களையும் மற்றும் பரிசுகளையும் நலன்விரும்பிகள் பலர் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளிந்கு வழங்கி செலவுகளின் ஒரு பகுதியை ஈடுசெய்துள்ளனர். தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளை நடாத்துவதற்கு மேலதிக நிதி தேவைப்படுவதால் பங்குபற்றும் ஒவ்வொரு போட்டியாளாரிடமும் விண்ணப்பக் கட்டணமாக **$10.00** உடன் ஒவ்வொரு போட்டிக்கும் தலா **$5.00** கட்டணமாக அறவிடப்படும்.

14.2. போட்டியாளர்கள் தாம் பங்குபற்றுகின்ற அனைத்துப் போட்டிகளுக்குமான மொத்தக் கட்டணத்தையும் ஒரே முறையிற் செலுத்த வேண்டும். கட்டணங்களைப் பிரித்துச் செலுத்த எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

14.3. போட்டிக்கான பூர்த்தி செய்யப்பட்ட உங்கள் விண்ணப்பப் படிவங்களை அதற்குரிய பணத்துடன் அல்லது காசோலையுடன் உங்கள் பாடசாலைப் பிரதிநிதியிடம் கையளிக்கலாம். **போட்டிக்கான கட்டணம் விண்ணப்பப் படிவத்துடன் செலுத்தப்படவேண்டும்.**

## 15. போட்டிகள் பற்றிய உங்கள் கருத்துகள்:

15.1 போட்டிகள் சம்பந்தப்பட்ட உங்கள் ஆக்கபூர்வமான கருத்துகளை வரவேற்கின்றேம். உங்கள் கருத்துகள் எமது போட்டிகளை மேலும் சிறப்படையச் செய்ய உதவியாக இருந்திருக்கின்றன, எதிர்காலத்திலும் இருக்கும் என்று நம்புகின்றோம்.

15.2 உங்கள் கருத்துகளை எமக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துங்கள். உங்கள் கருத்துகள் உரிய நேரத்தில் பரீட்சைக் குழுவினரால் பரிசீலனை செய்யப்படும்.

15.3 உங்களுக்கு ஏதாவது முறைப்பாடுகள் இருப்பின், அவற்றைப் போட்டிகளின் இணைப்பாளரிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். இணைப்பாளரின் பதிலிலோ அல்லது அவர் அளித்த விளக்கத்திலோ திருப்தி இல்லாதவிடத்து, அவற்றை எழுத்து மூலம் பரீட்சைச் சபைக்கு விண்ணப்பிக்கலாம். முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று 2 கிழமைகளுக்குள் பரீட்சைச் சபையினர் அந்த முறைப்பாடுகளுக்கான பதிலை எழுத்து மூலம் தெரிவிப்பார்கள்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2024
### The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

### போட்டிகளும் வயதுப் பிரிவுகளும்

இணைப்பு: 1

| போட்டி | சாதாரண போட்டிகள் | பிரிவு | வயது | பிறந்த திகதி |
|---|---|---|---|---|
| **PP** | கவிதை மனனப் போட்டி | பாலர் பிரிவு | 5 வயதின் கீழ் | 01.07.2019 க்குப்பின் |
| **BP** | கவிதை மனனப் போட்டி | ஆரம்ப பிரிவு | 5 வயது | 01.07.2018 - 30.06.2019 |
| **BV** | வாய்மொழித் தொடர்பாற்றல் | ஆரம்ப பிரிவு | 5 வயது | 01.07.2018 - 30.06.2019 |
| **LP** | கவிதை மனனப் போட்டி | கீழ்ப் பிரிவு | 6-7 வயது | 01.07.2016 - 30.06.2018 |
| **LV** | வாய்மொழித் தொடர்பாற்றல் | கீழ்ப் பிரிவு | 6-7 வயது | 01.07.2016 - 30.06.2018 |
| **IV** | வாய்மொழித் தொடர்பாற்றல் | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.2014 - 30.06.2016 |
| **IW** | எழுத்தறிவுப் போட்டி | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.2014 - 30.06.2016 |
| **IW-B** | அடிப்படை எழுத்தறிவுப் போட்டி | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.2014 - 30.06.2016 |
| **IS** | பேச்சுப் போட்டி | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.2014 - 30.06.2016 |
| **SV** | வாய்மொழித் தொடர்பாற்றல் | மேற்பிரிவு | 10-11 வயது | 01.07.2012 - 30.06.2014 |
| **SW** | எழுத்தறிவுப் போட்டி | மேற்பிரிவு | 10-11 வயது | 01.07.2012 - 30.06.2014 |
| **SW-B** | அடிப்படை எழுத்தறிவுப் போட்டி | மேற்பிரிவு | 10-11 வயது | 01.07.2012 - 30.06.2014 |
| **SS** | பேச்சுப் போட்டி | மேற்பிரிவு | 10-11 வயது | 01.07.2012 - 30.06.2014 |
| **AdSW** | எழுத்தறிவுப் போட்டி | அதிமேற் பிரிவு | 12-14 வயது | 01.07.2009 - 30.06.2012 |
| **AdSW-B** | அடிப்படை எழுத்தறிவுப் போட்டி | அதிமேற் பிரிவு | 12-14 வயது | 01.07.2009 - 30.06.2012 |
| **AdSV** | வாய்மொழித் தொடர்பாற்றல் | அதிமேற் பிரிவு | 12-14 வயது | 01.07.2009 - 30.06.2012 |
| **AdSS** | பேச்சுப் போட்டி | அதிமேற் பிரிவு | 12-14 வயது | 01.07.2009 - 30.06.2012 |
| **YV** | வாய்மொழித் தொடர்பாற்றல் | இளைஞர் பிரிவு | 15-17 வயது | 01.07.2006 - 30.06.2009 |

### *விசேட போட்டிகள்*

| | | | | |
|---|---|---|---|---|
| **SpPP** | விசேட கவிதைமனனப் போட்டி (ஆத்திசூடி) | பாலர் பிரிவு | 5 வயதின் கீழ் | 30.06.2019 க்குப்பின் |
| **SpBP** | விசேட கவிதைமனனப் போட்டி (ஆத்திசூடி) | ஆரம்பப் பிரிவு | 6 வயதின் கீழ் | 30.06.2018 க்குப்பின் |
| **SpLW** | விசேட எழுத்தறிவுப் போட்டி | கீழ்ப் பிரிவு | 8 வயதின் கீழ் | 30.06.2016 க்குப்பின் |
| **SpIP** | விசேட கவிதைமனனப் போட்டி (திருக்குறள்) | மத்திய பிரிவு | 10 வயதின் கீழ் | 30.06.2014 க்குப்பின |
| **SpAdSP** | விசேட கவிதைமனனப் போட்டி (திருக்குறள்) | அதிமேற் பிரிவு | 15 வயதின் கீழ் | 30.06.2009 க்குப்பின் |
| **SpSA** | தனிநடிப்பு | மேற் பிரிவு | 12 வயதின் கீழ் | 30.06.2012 க்குப்பின் |
| **SpYW** | விசேட எழுத்தறிவுப் போட்டி | இளைஞர் பிரிவு | 18 வயதின் கீழ | 30.06.2006 க்குப்பின் |
| **SpYImS** | விசேட முன்னேற்பாடற்ற பேச்சுப் போட்டி | விசேட இளைஞர் பிரிவு | 25 வயதிற்குட்பட்டோர் | 01.07.1999 க்குப்பின் |

### *குழுநிலைப் போட்டிகள்*

| | | | | |
|---|---|---|---|---|
| **AdSQ** | வினாடி வினாப் போட்டி | அதிமேற் பிரிவு | 15 வயதின் கீழ் | 30.06.2009 க்குப்பின் |
| **YQ** | வினாடி வினாப் போட்டி | இளைஞர் பிரிவு | 18 வயதின் கீழ் | 30.06.2006 க்குப்பின் |
| **YD** | விவாதப் போட்டி | இளைஞர் பிரிவு | 18 வயதின் கீழ் | 30.06.2006 க்குப்பின் |

குறிப்பு: இங்கு நிழற் படுத்தப்பட்ட போட்டிகள் அனைத்தும் தேசிய நிலையிலும் போட்டிகளாக நடாத்தப்படும். ஒவ்வொரு மாநிலத்திலும் மேலுள்ள அட்டவணையிலிருந்து போட்டிகள் தெரிந்தெடுக்கப்பட்டு நடாத்தப்படும். எனவே எல்லாப் போட்டிகளும் எல்லா மாநிலங்களிலும் நடாத்தப்படும் சாத்தியம் இருக்காது. தேசிய நிலைப் போட்டிகள் எல்லா மாநிலங்களிலும் நடாத்த முயற்சிகள் எடுக்கப்படும்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

## போட்டியாளர்கள் போட்டிகளை தெரிவு செய்வதற்கான வழிகாட்டி

இந்த அட்டவணை ஒவ்வொரு குழுவிற்கும் பொருத்தமான போட்டிகள் குறித்த வழிகாட்டுதலை வழங்க முனைகின்றது. இது வழிகாட்டியாக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன் தயவுசெய்து "போட்டியில் பங்குபற்றுவதற்கான பொதுவிதிமுறைகளும் தகுதிகளும்" ஆவணத்தை வாசித்து புரிந்து கொள்ளுங்கள். மேலதிக விபாங்களிற்கு மாநில இணைப்பாளர்களிடம் தொடர்புகொள்ளவும்.

| பிரிவு | பங்குபெறக்கூடிய போட்டிகள் |
|---|---|
| **பாலர் பிரிவு**<br>வயது: 5 வயதின் கீழ்<br>(01/07/2019 இற்கு பின்) | PP - பாலர் பிரிவு கவிதை மனனப் போட்டி<br>BV - ஆரம்பப் பிரிவு வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி<br>SpPP – பாலா் பிரிவு விசேட கவிதை மனனப் போட்டி – ஆத்திசூடி |
| ஆரம்பப் பிரிவு<br>வயது: 5 வயது<br>(01/07/2018 – 30/06/2019) | BP - ஆரம்பப் பிரிவு கவிதை மனனப் போட்டி<br>BV - ஆரம்பப் பிரிவு வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி<br>SpBP – ஆரம்பப் பிரிவு விசேட கவிதை மனனப் போட்டி – ஆத்திசூடி |
| கீழ்ப் பிரிவு<br>வயது: 6 - 7 வயது<br>(01/07/2016 – 30/06/2018) | LP - கீழ்ப் பிரிவு கவிதை மனனப் போட்டி<br>LV - கீழ்ப் பிரிவு வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி<br>SpIP - மத்திய பிரிவு விசேட கவிதை மனனப் போட்டி - திருக்குறள்<br>**எழுத்தறிவுப் போட்டிகள்**<br>SpLW - கீழ்ப் பிரிவு விசேட எழுத்தறிவுப் போட்டி<br>***(ஏதேனும் ஓர் எழுத்தறிவுப் போட்டியில் மட்டுமே பங்குபற்ற முடியும்.)*** |
| மத்திய பிரிவு<br>வயது: 8 - 9 வயது<br>(01/07/2014 – 30/06/2016) | IS - மத்திய பிரிவு பேச்சுப் போட்டி<br>IV - மத்திய பிரிவு வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி<br>SpIP - மத்திய பிரிவு விசேட கவிதை மனனப் போட்டி - திருக்குறள்<br>SpSA - மேற் பிரிவு விசேட தனி நடிப்பு<br>**எழுத்தறிவுப் போட்டிகள்**<br>IW - மத்திய பிரிவு எழுத்தறிவுப் போட்டி<br>IW-B - மத்திய பிரிவு அடிப்படை எழுத்தறிவுப் போட்டி<br>***(ஏதேனும் ஓர் எழுத்தறிவுப் போட்டியில் மட்டுமே பங்குபற்ற முடியும்.)*** |
| மேற் பிரிவு<br>வயது: 10 - 11 வயது<br>(01/07/2012 – 30/06/2014) | SS – மேற் பிரிவு பேச்சுப் போட்டி<br>SV – மேற் பிரிவு வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி<br>SpAdSP – அதிமேற் பிரிவு விசேட கவிதை மனனப் போட்டி - திருக்குறள்<br>SpSA - மேற் பிரிவு விசேட தனி நடிப்பு<br>**எழுத்தறிவுப் போட்டிகள்**<br>SW - மேற் பிரிவு எழுத்தறிவுப் போட்டி<br>SW-B - மேற் பிரிவு அடிப்படை எழுத்தறிவுப் போட்டி<br>***(ஏதேனும் ஓர் எழுத்தறிவுப் போட்டியில் மட்டுமே பங்குபற்ற முடியும்.)***<br>**குழுநிலைப் போட்டிகள்**<br>AdSQ - அதிமேற் பிரிவு வினாடி வினாப் போட்டி<br>YD - இளைஞர் பிரிவு விவாதப் போட்டி |

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2024
## The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

| பிரிவு | பங்குபெறக்கூடிய போட்டிகள் |
|---|---|
| அதிமேற் பிரிவு<br>வயது: 12 - 14 வயது<br>(01/07/2009 – 30/06/2012) | AdSS – அதிமேற் பிரிவு பேச்சுப் போட்டி<br>AdSV – அதிமேற் பிரிவு வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி<br>SpAdSP – அதிமேற் பிரிவு விசேட கவிதை மனனப் போட்டி - திருக்குறள்<br>**எழுத்தறிவுப் போட்டிகள்**<br>AdSW - அதிமேற் பிரிவு எழுத்தறிவுப் போட்டி<br>AdSW-B - அதிமேற் பிரிவு அடிப்படை எழுத்தறிவுப் போட்டி<br>***(ஏதேனும் ஓர் எழுத்தறிவுப் போட்டியில் மட்டுமே பங்குபற்ற முடியும்.)***<br><br>**குழுநிலைப் போட்டிகள்**<br>AdSQ - அதிமேற் பிரிவு வினாடி வினாப் போட்டி<br>YQ – இளைஞர் பிரிவு வினாடி வினாப் போட்டி<br>***(ஏதேனும் ஒரு வினாடி வினாப் போட்டியில் மட்டுமே பங்குபற்ற முடியும்.)***<br>YD - இளைஞர் பிரிவு விவாதப் போட்டி |
| இளைஞர் பிரிவு<br>வயது: 15 - 17 வயது<br>(01/07/2006 – 30/06/2009) | YV – இளைஞர் பிரிவு வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி<br>SpYImS - விசேட முன்னேற்பாடற்ற (Impromptu) பேச்சுப் போட்டி<br><br>**எழுத்தறிவுப் போட்டிகள்**<br>SpYW - இளைஞர் பிரிவு விசேட எழுத்தறிவுப் போட்டி<br><br>**குழுநிலைப் போட்டிகள்**<br>YQ – இளைஞர் பிரிவு வினாடி வினாப் போட்டி<br>YD - இளைஞர் பிரிவு விவாதப் போட்டி |
| விசேட இளைஞர் பிரிவு<br>வயது: 25வயதிற்குட்பட்ட<br>(30/06/1999 இற்குப் பின்) | SpYImS - விசேட முன்னேற்பாடற்ற (Impromptu) பேச்சுப் போட்டி |

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2024
## The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

இணைப்பு: 2

## விண்ணப்பப் படிவம் APPLICATION FORM

**(விண்ணப்பங்கள் எமது இணையத்தளத்தினூடாக (https://www.tamilcompetition.org.au/comp/login) சமர்ப்பிக்கப்படுவதை ஊக்கப்படுத்தவிரும்புகின்றோம்.)**

குடும்பப் பெயர்:……………………............ Family Name:………………………………..(in English)

முதற் பெயர்:………………………… First Name:…………………………………..(in English)

பிறந்த திகதி: ………………………………….. பிறந்தநாடு:………………………………

Gender: .................. Telephone :………………....... Mobile Phone :……….........

Address:…………………………………………………………………………

E-mail address:…………………………

**அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்தில் பிறக்காதவராயின் நீங்கள் குடிபெயர்ந்த திகதி:………......**

**அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்தில் கடந்தமூன்று வருடங்களும் தொடர்ச்சியாக வாழ்ந்து இருக்கின்றீர்களா?**

**……………...இல்லாவிட்டால் இதுபற்றிய விபரம்: ………………**

**……………………......................................................................................................................**

நீங்கள் கற்கும் தமிழ்ப் பாடசாலை:………………………………………………………....

2024 இல் பங்குபற்றும் போட்டி / போட்டிகள்:

| சாதாரண போட்டிகள் | விசேட போட்டிகள் | குழுநிலைப் போட்டிகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

செலுத்த வேண்டிய கட்டணம்:

விண்ணப்பக் கட்டணம் = **$10.00** +

போட்டிகளிற்கான கட்டணம் (**போட்டிகளின் எண்ணிக்கை x $5.00**) = …………

மொத்தக் கட்டணம் = …………

தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளின் விதிமுறைகள் அனைத்தையும் வாசித்து விளங்கிக் கொண்டேன் என்றும், இந்த விண்ணப்பப் படிவத்தின் மறுபக்கத்தில் உள்ள விதிமுறைகளுக்கு இணங்கி இந்த விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்கின்றேன் என்றும் உறுதியளிக்கின்றேன். அத்துடன் போட்டி விதிகளுக்கிணங்க, எனது விண்ணப்பப் படிவம் சரியான விபரங்களைக் கொண்டுள்ளதெனவும் உறுதி செய்கின்றேன். இதிலே தரப்பட்ட ஏதேனும் விபரம், அல்லது விபரங்கள் பிழையென அறியவரும் வேளையில் நான் போட்டியிலிருந்து விலக்கப்படலாம் என்பதையும் அறிவேன்.

________________________ ________________

கையொப்பம் (பங்குபற்றுபவர் / பெற்றோர்) திகதி

மேற்குறிப்பிட்ட விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை சரியென உறுதியளிக்கின்றேன்.

________________________ ________________

ஆசிரியர் / அதிபரின் கையொப்பம் திகதி

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

## பொது விதிமுறைகள்: தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2024

1. போட்டியாளரின் வயது 01-07-2024 இல் உள்ளபடி கணிக்கப்படும்.
2. இந்த ஆண்டுக்கான வயதுப் பிரிவுகளும், போட்டி வகைகளும் தரப்பட்டுள்ளன.
3. போட்டியாளர்கள் தங்கள் வயதுப்பிரிவிற்கான எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றலாம். குறித்த ஒரு போட்டி, போட்டியாளரின் பிரிவில் நடைபெற்றாலும், அவர் தமது வயதுப் பிரிவிலும் பார்க்கக் கூடிய வயதுப் பிரிவில் நடைபெறும் அப்போட்டியிலும் பங்குபற்றலாம். மேற்குறிப்பிட்ட விதிக்களுக்கமையக் குறித்த ஒரு போட்டியில், போட்டியாளர் ஏதாவது ஒரு வயதுப் பிரிவில் மட்டுமே பங்குபற்றலாம். போட்டியாளர் ஒரு எழுத்தறிவுப் போட்டியில் மட்டுமே பங்குபற்றலாம்.
4. 2023ம் ஆண்டு மாநில நிலையிலேயோ தேசிய நிலையிலேயோ நடைபெற்ற போட்டிகளில் அதி உயர் பரிசைப் பெற்ற போட்டியாளர் (மாநில நிலையில் மட்டும் நடைபெறும் போட்டிகளில் முதலாவது பரிசு அல்லது தேசியப் போட்டிகளில் தங்கப் பதக்கம்) 2024ம் ஆண்டு அதே போட்டியிலேயோ அல்லது அதே வகைப் போட்டியிலேயோ பங்கு பெற்ற அனுமதிக்கப்படுவார். எனினும் அப்போட்டியாளர் மாநில நிலையில் முதல் மூன்று இடங்களைப் பெறமுடியாது அத்துடன் அப்போட்டியாளர் தேசியப் போட்டியில் பங்கு பற்றவும் முடியாது. பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றைய பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். மேலதிக விபரத்திற்கு "கடந்த வருடம் தேசிய போட்டிகளில் அல்லது மாநிலப் போட்டிகளில் முதற் பரிசு பெற்ற போட்டியாளர்கள்" என்ற பகுதியைப் பார்க்கவும்.
5. 2023ம் ஆண்டு பாலர் பிரிவிற்கான, அல்லது ஆரம்ப பிரிவிற்கான கவிதை மனனப் போட்டியில் முதற் பரிசு பெற்ற மாணவர்கள் 2024ம் ஆண்டு கீழ்ப் பிரிவு கவிதை மனனப் போட்டியிற் பங்குபற்றி எந்த ஒரு பரிசையும் வெல்லமுடியும். தேசிய நிலையில் கீழ்ப் பிரிவு கவிதை மனனப் போட்டியிலே தெரிவு செய்யப்பட்டு அதிற் பங்குபற்றித் தங்கப்பதக்கத்தை வெல்லமுடியும்.
6. கடந்த ஆண்டு பாலர் பிரிவு மற்றும் ஆரம்ப பிரிவுக் கவிதை மனனப் போட்டிகளிற் பங்குபற்றி மாநில நிலையிலே முதற் பரிசு பெற்ற போட்டியாளர்கள், இந்த வருடம் பாலர் பிரிவு மற்றும் ஆரம்பப் பிரிவிற்கான விசேட கவிதை மனனப் (ஆத்திசூடி) போட்டியிற் பங்குபற்றி எந்தப் பரிசையும் வெல்லமுடியும். கடந்த ஆண்டு கீழ்ப் பிரிவு கவிதை மனனப் போட்டியிற் பங்குபற்றித் தேசிய நிலையிலே அல்லது மாநில நிலையிலே முதற் பரிசு பெற்ற போட்டியாளர்கள் இந்த வருடம் மத்திய பிரிவு விசேட கவிதை மனனப் (திருக்குறள்) போட்டியிற் பங்குபற்றி எந்தப் பரிசையும் வெல்லமுடியும்.
7. "விசேட எழுத்தறிவுப் போட்டி - இளைஞர் பிரிவு" ஓர் பயிற்சி பரீட்சையாக நடாத்தப்படுவதுடன் பரீட்சை முடிவுகள் தனிப்பட்ட முறையில் மாணவர்களுக்கு மட்டும் தெரியப்படுத்தப்படும். இப்போட்டிக்கு தேசிய/மாநில நிலையோ பதங்கங்களோ வழங்கப்படாது.
8. அண்மையில் இந்தியா அல்லது இலங்கையிலிருந்து வந்து இங்கு குடியேறியவர்களுக்கென 6, 8, 10, 12, 15, 18 வயதுக்குட்பட்டவர்கள் என ஆறு பிரிவுகளில் விசேட போட்டிகள் நடாத்தப்படுகின்றன. தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளின் விதிமுறைகளின்படி அவர்கள் சாதாரணப் பிரிவுப் போட்டிகளிற் பங்குபற்றி முதல் மூன்று பரிசில்கள் பெற முடியாதுவிடின், இவர்கள் விசேட, குழுநிலைப் போட்டிகளிற் பங்குபற்றி முதல் மூன்று பரிசில்கள் பெற முடியும். (மேலதிக விபரத்துக்கு "அண்மையில் அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்திற் குடியேறிய போட்டியாளர்கள்" என்ற பகுதியைப் பார்க்கவும்). இது பற்றிய சந்தேகங்கள் இருப்பின் விண்ணப்பிப்பதற்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
9. போட்டியாளரின் வயது, பிறந்த இடம், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளிற் குடியேறிய திகதி என்பன பற்றிய அத்தாட்சிகள் (கடவுச்சீட்டு அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்) தேவைப்படின் காண்பிக்கப்பட வேண்டும். இந்த அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் அவர்கள் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். எமக்குக் கிடைக்கப்பெறும் இந்த விபரங்கள் அனைத்தும் இரகசியமாக வைத்திருக்கப்படும் என்பதை உறுதிப் படுத்துகின்றோம்.
10. கடந்த ஆண்டுப் போட்டிகளிற் சுழல்/வெற்றிக் கேடயங்கள் பெற்றவர்கள் 2024 இல் தத்தமது போட்டிகளுக்கு முன்பாகக் கேடயங்களை ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு கேடயங்களை ஒப்படைக்கத் தவறுபவர்கள் 2024 போட்டிகளிற் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.
11. ஒவ்வொரு போட்டியாளாரிடமும் விண்ணப்பக் கட்டணமாக **$10.00** உடன் ஒவ்வொரு போட்டிக்கும் தலா **$5.00** கட்டணமாக அறவிடப்படும்.
12. இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் மாநில விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் மாநில இணைப்பாளரிற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். போட்டிக்கான கட்டணம் விண்ணப்பப் படிவத்துடன் செலுத்தப்படவேண்டும்.
13. தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் பற்றிய அனைத்து விபரங்களையும் எமது சங்கத்தின் இணையத் தளமான **www.tamilcompetition.org** இல் பெற்றுக் கொள்ளலாம்.
14. போட்டியாளரின் புகைப்படங்களைத் தமிழ் ஊக்குவிப்புப் போட்டியின் இணையதளத்தில், சஞ்சிகைகளில், முக நூலில் பிரசுரிப்பதற்கு அனுமதி வழங்குகின்றோம்.

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

**கட்டணம்:** …………… செலுத்தப்பட்டது / செலுத்தப்படவில்லை

**குறிப்பு:**…………………………………………………………………………………….

**போட்டி இணைப்பாளர்** :…………………………………**திகதி** :……………………………

## கவிதை மனனப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும் (இணைப்பு: 3)

1. **கவிதை மனனப் போட்டி - (பாலர் பிரிவு, ஆரம்ப பிரிவு, கீழ்ப் பிரிவு)**

   போட்டிக்குக் கொடுக்கப்படும் கவிதைகளை மனனஞ் செய்து கூறல் வேண்டும். ஆனால் அவற்றின் பொருளைக் கூறவேண்டியதில்லை. பாலர் பிரிவிலும், ஆரம்ப பிரிவிலும் ஒவ்வொரு போட்டியாளருக்கும் 3 நிமிடங்களும், கீழ்ப்பிரிவில் ஒவ்வொரு போட்டியாளருக்கும் 5 நிமிடங்களும் வழங்கப்படும்.

2. **விசேட கவிதை மனனப் போட்டி - (மத்திய பிரிவு, அதிமேற் பிரிவு)**

   இணைப்பு 14, இணைப்பு 15 இல் எம்மால் கொடுக்கப்பட்ட திருக்குறள்களையும் அதற்கான பொருள்களையும் மனனம் செய்து மத்திய பிரிவு, அதிமேற் பிரிவு போட்டியாளர்கள் கூற (ஒப்புவிக்க) வேண்டும். இவற்றில் எந்த மாற்றங்களும் செய்தல் ஆகாது. எனினும் போட்டியாளர்கள் சரியான முறையில் பொருள்விளங்க அவற்றைப் பிரித்தோ சேர்த்தோ கூறலாம். ஒவ்வொரு குறளையும் பொருளையும் ஒரு முறை கூறுவதே போதுமானதாகும். இரண்டு முறைக்கு மேல் ஒரே குறளையும் பொருளையும் கூறுமிடத்து மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
   **அதிமேற் பிரிவு:** இப்போட்டிக்குப் பத்து திருக்குறள்கள் பொருள்களுடன் கொடுக்கப்படும். பத்துக் குறள்களையும் அவற்றின் பொருள்களுடன் பிழையின்றித் தெளிவாகக் கூறல் வேண்டும்.
   **மத்திய பிரிவு:** இப்போட்டிக்கு ஐந்து திருக்குறள்கள் பொருள்களுடன் கொடுக்கப்படும். ஐந்து குறள்களையும் அவற்றின் பொருள்களுடன் பிழையின்றித் தெளிவாகக் கூறல் வேண்டும்.

3. **விசேட கவிதை மனனப் போட்டி – ஆத்திசூடி (பாலர் பிரிவு, ஆரம்பப் பிரிவு)**

   இணைப்பு 12, இணைப்பு 13 இல் எம்மால் கொடுக்கப்பட்ட ஆத்திசூடியையும் அதற்கான விளக்கத்தையும் மனனம் செய்து பாலர் பிரிவு, ஆரம்பப் பிரிவு போட்டியாளர்கள் கூற வேண்டும். இப்போட்டிக்கு 7 ஆத்திசூடிகள் கொடுக்கப்படும். இவற்றில் எந்த மாற்றங்களும் செய்தல் ஆகாது. ஒவ்வொரு ஆத்திசூடியையும் பொருளையும் ஒரு முறை கூறுவதே போதுமானதாகும். இரண்டு முறைக்கு மேல் கூறுமிடத்து மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
   **ஆரம்பப் பிரிவு:** இப்போட்டிக்குப் ஏழு ஆத்திசூடிகள் பொருள்களுடன் கொடுக்கப்படும். ஏழு ஆத்திசூடிகளையும் அவற்றின் பொருள்களுடன் பிழையின்றித் தெளிவாகக் கூறல் வேண்டும்.
   **பாலர் பிரிவு:** இப்போட்டிக்குப் 3 ஆத்திசூடிகள் பொருள்களுடன் கொடுக்கப்படும். 3 ஆத்திசூடிகளையும் அவற்றின் பொருள்களுடன் பிழையின்றித் தெளிவாகக் கூறல் வேண்டும்.

4. போட்டியின் போது **உச்சரிப்பு (30%), பொருளுணர்ந்து கூறுதல் (25%), சபை மரபும்** ஆதிக்கமும் (30%) மனனஞ் செய்யும் திறமை (15%) ஆகியன கவனிக்கப்படும்.

5. **உச்சரிப்புத் திறன்** (30 %)

   - முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள/ ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகளையும், வல்லின, இடையின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.
   - தூய தமிழ் உச்சரிப்பு
   - சொற்களை விழுங்காது ஒப்புவித்தல் (குறிப்பாக வசனத்தின் இறுதியில் வரும் சொற்கள்)
   - பாலர் பிரிவுக் குழந்தைகளின் மழலைத் தமிழுக்குப் புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது.

6. **பொருள் உணர்ந்து கூறும் திறன்** (25%),

   - பொருத்தமான முறையில் சொற்களைப் பிரித்தல்
   - ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்திக் கவிதையைக் கூறுதல்

- வரிகளுக்குத் தகுந்த உணர்ச்சி (மிகையான உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல், முரணான சைகைகளைப் பயன்படுத்துதல், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் பிடித்தல் போன்றவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்).

7. **சபை மரபு - ஆதிக்கத்திறன்** (30%)

- மண்டபத்துள் நுழையும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையிலே தம்மை வைத்திருத்தல். (நெளிதல், வளைதல் போன்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும்)
- அடக்கமாகவும், தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து கவிதையை ஆரம்பித்தல். ஆரம்பத்திற் சபையோருக்கு வணக்கம் தெரிவிக்கும் போதும் இறுதியில் நன்றி கூறும் போதும் தரப்பட்டுள்ள வசனங்களை மட்டுமே பாவித்தல் வேண்டும். இவற்றில் எந்த மாற்றங்களும் செய்தல் ஆகாது. மிகைப்படுத்தப்பட்ட வேறு வசனங்களுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
- கவிதையை ஒப்புவிக்கும்போது உடலை நேராகவும், தளர்வாகவும் வைத்திருத்தல். (விறைப்பாக நிற்பதையும், செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல்)
- சபையில் உள்ள அனைவரையும் பார்த்து ஒப்புவித்தல்.(குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ, நிலம், சுவர், கூரை ஆகியவற்றை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல்.
- முக பாவனை: கவிதையின் பொருளை அனுபவித்து, இரசித்து ஒப்புவிக்கும் பாங்கு.
- முக்கியமாகக் கவிதையைக் கவிதை நடையிற் கூறவேண்டும்.

8. **மனனஞ் செய்யும் திறன்** (15%)

- போட்டிக்குக் கொடுக்கப்பட்ட கவிதையை மனனஞ் செய்யும்பொழுது அதிலே எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது.
- சொற்களைத் தவறவிடாது, மாற்றாது முழுவதையும் கூறுதல் (கவிதையில் வரும் சொற்களை அல்லது வரிகளைத் தவறவிடுமிடத்தோ, அல்லது மாற்றுமிடத்தோ புள்ளிகள் குறைக்கப்படும்).
- சரளமான ஆற்றொழுக்கான ஒப்புவிப்பு (தடுமாற்றத்துடன் விழித்துக் கொண்டு நிற்றல், ஒரே வரியைத் தடுமாற்றம் காரணமாகத் திரும்பச் சொல்லுதல் ஆகியவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்).
- எழுத்துப் பிரதியையோ அல்லது துணைக்குறிப்பையோ பார்த்துக் கவிதையைக் கூறமுடியாது. இதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- கவிதையில் வரும் வரியை மறந்து போகுமிடத்து, நடுவரில் ஒருவர் போட்டியாளர் விட்ட இடத்திலிருந்து தொடங்க உதவலாம். அவ்வாறு உதவி பெறுமிடத்தும், புள்ளிகள் குறைக்கப்படும்.
- போட்டி நடைபெறும் வேளையில் பார்வையாளர்கள் (போட்டியாளர்களைச் சார்ந்த பெற்றோர் போன்றவர்கள் உட்பட) எந்த விதமான உதவியும் செய்யக்கூடாது.

9. எல்லா விபரங்களுக்கும் போட்டிகளுக்குரிய முழுமையான விதிமுறைகளை வாசிக்கவும். மேலதிக விளக்கம் தேவைப்படின் எம்முடன் கீழே தரப்பட்ட வழிகளிலே தொடர்பு கொள்ளவும்.

10. போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டிகளில் இருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சைச் சபையின் தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

## பேச்சுப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும் (இணைப்பு: 4)

1) மத்திய பிரிவிற்கும் (8-9 வயது), மேற்பிரிவிற்கும் (10-11 வயது), அதிமேற்பிரிவிற்கும் (12-14 வயது) உரிய பேச்சுகள் எம்மால் எழுதி வழங்கப்படும். போட்டியாளர் தமக்குக் கொடுக்கப்படும் பேச்சினை மனனஞ் செய்து 5 நிமிடங்களுக்குள் பேச வேண்டும்.

2) இந்த மூன்று பிரிவுகளுக்குமான பேச்சுப் போட்டிகளும் மாநில மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் நடாத்தப்படும். மாநில மட்டத்தில் முதல் மூன்று பரிசுகளைப் பெறும் போட்டியாளர்கள் தேசியநிலைப் போட்டிக்கு அனுமதி பெறுவர்.

3) பேச்சுப் போட்டிக்கு மதிப்பீடு செய்யப்படும் அம்சங்கள்: **உச்சரிப்பு (30%), பொருளுணர்ந்து பேசுதல் (25%), சபைமரபும் ஆதிக்கமும் (25%), மனனஞ் செய்தல் (20%)**, என்ற விகிதாசார அடிப்படையிலேயே பேச்சுக்கள் கணிக்கப்படும்.

4) **உச்சரிப்புத் திறன்(30 %)**

- முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகளையும் வல்லின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்து அச்சொற்களின் சரியான உச்சரிப்போடு பேசவேண்டும்.
- தூயதமிழ் உச்சரிப்பு கவனிக்கப்படும்.
- சொற்களை விழுங்காது பேசுதல் (குறிப்பாக வசனத்தின் மற்றும் வார்த்தைகளின் இறுதியில் வரும் சொற்கள்) கவனிக்கப்படும்.

5) **பொருள் உணர்ந்து பேசும் திறன்** (25%),

- பொருத்தமான முறையிற் சொற்களைப் பிரித்துப் பேசவேண்டும்.
- ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்தி உச்சரித்துப் பேசுதல்
- வினா, வியப்பிசைக்குறி வரும் இடங்களைத் தகுந்தவாறு கையாளுதல் (உ+ ம்:“அது எங்கே ?” என்பதை “அது எங்கே” போலப் பேசுதல் ஆகாது)
- வசனங்களுக்குத் தகுந்த உணர்ச்சி: (மிகையான உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல், முரணான சைகைகளைப் பயன்படுத்துதல், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் பிடித்தல் போன்றவற்றைத் தவிர்ப்பது நன்று.)

6) **சபை மரபு - ஆதிக்கத்திறன்**(25%)

- மேடைக்குச் செல்லும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையிலே தம்மை வைத்திருத்தல்.(நெளிதல், வளைதல் போன்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும்)
- அடக்கமாகவும் தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து பேச்சை ஆரம்பித்தல். ஆரம்பத்திற் சபையோருக்கு வணக்கம் தெரிவிக்கும் போதும் இறுதியில் நன்றி கூறும் போதும் தரப்பட்டுள்ள வசனங்களை மட்டுமே பாவித்தல் வேண்டும். இவற்றில் எந்த மாற்றங்களும் செய்தல் ஆகாது. மிகைப்படுத்தப்பட்ட வேறு வசனங்களுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
- பேசும்போது உடலை நேராகவும், தளர்வாகவும் வைத்திருத்தல். (விறைப்பாக நிற்பதையும், செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல் வேண்டும்)
- சபையில் உள்ள அனைவரையும் பார்த்து ஒப்புவித்தல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ, நிலம், சுவர், கூரை ஆகியவற்றை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல்.)
- முக பாவனை: பேச்சின் பொருளை உணர்ந்து, அனுபவித்து, இரசித்துப் பேசும் பாங்கு.

- தகுந்த வேகத்துடன் பேச்சை ஒப்புவித்தல்.
  (மிக வேகமாகவோ, மிக மெதுவாகவோ பேசுவதைத் தவிர்த்தல்.)

7) **மனனஞ் செய்யும் திறன்** (20%)

- போட்டிக்குக் கொடுக்கப்பட்ட பேச்சை மனனஞ் செய்யும்பொழுது அதிலே எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது.
- எழுத்துக்களையோ, சொற்களையோ, வசனங்களையோ பந்திகளையோ தவறவிடாது பேச்சு முழுவதையும் பேசுதல்.
- எழுத்துப் பிரதியையோ, குறிப்புக்களையோ பார்த்துப் பேசுதல் ஆகாது.
  அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- வசனத்தை மறந்து போகுமிடத்து, நடுவரில் ஒருவர் போட்டியாளர் மீண்டும் தொடர்வதற்கு உதவி செய்வர். அவ்வாறு உதவி பெறுமிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.
- சரளமான ஆற்றொழுக்கான பேச்சு (தடுமாற்றத்துடன் விழித்துக் கொண்டு நிற்றல், ஒரே வசனத்தைத் தடுமாற்றம் காரணமாகத் திரும்பச் திரும்பச் சொல்லுதல் ஆகியவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்).
- போட்டி நடைபெறும் வேளையில் போட்டியாளர்களைச் சார்ந்த பார்வையாளர்கள் (பெற்றோர்) எந்த விதமான உதவியும் செய்யக்கூடாது. அப்படிச் செய்யுமிடத்தும் புள்ளிகள் குறைக்கப்படும்.

8) எல்லா விபரங்களுக்கும் போட்டிகளுக்குரிய முழுமையான விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழே தரப்பட்ட வழிகளிற் தொடர்பு கொள்ளவும்.

9) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டிகளில் இருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சைச் சபையின் தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2024
## The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

## விசேட முன்னேற்பாடற்ற பேச்சுப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்

1) விசேட முன்னேற்பாடற்ற (impromptu) பேச்சுப் போட்டியில் போட்டியாளர்களுக்குக் கொடுக்கப்படும் தலைப்பில் தாமாகவே சிந்தித்துப் பேச்சு ஒன்றைத் தயார் செய்து பேச வேண்டும்.

2) நீங்கள் பேசும் போது உதவிக் குறிப்புக்களைப் (palm card) பார்த்துப் பேசலாம், இதற்குப் புள்ளிகள் குறைக்கப்படமாட்டாது.

3) பேச்சின் தலைப்பு போட்டி ஆரம்பிப்பதற்குப் 20 நிமிடங்களிற்கு முன் கொடுக்கப்படும்.

4) விசேட முன்னேற்பாடற்ற பேச்சுப் போட்டி மாநில மட்டத்தில் நடாத்தப்படும்.

5) மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு பேச்சுப் போட்டிகளிற் பங்கு பற்றும் போட்டியாளர்கள் விசேட முன்னேற்பாடற்ற பேச்சுப் போட்டியிற் பங்குபற்ற முடியாது.

6) போட்டி நடைபெறும் வேளையிற் போட்டியாளர்களைச் சார்ந்த பார்வையாளர்கள் (பெற்றோர்) எந்த விதமான உதவியும் செய்யக்கூடாது. அப்படிச் செய்தாற் புள்ளிகள் குறைக்கப்படும்.

7) முன்னேற்பாடற்ற பேச்சுப் போட்டிக்கு மதிப்பீடு செய்யப்படும் அம்சங்கள்: **முன்வைக்கப்படும் கருத்துக்கள்** (30%), **உச்சரிப்பு** (20%), **பொருளுணர்ந்து பேசுதல்** (25%), **சபைமரபும் ஆதிக்கமும்** (25%) என்ற விகிதாசார அடிப்படையிலேயே பேச்சுக்கள் கணிக்கப்படும்.

8) **முன்வைக்கப்படும் கருத்துக்கள்** (30%)

- ஒருவர் தனக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பிற்குக் கொடுக்கும் விளக்கமும் அதன் தராதரமும்.
- தலைப்பிற்கு ஆதரவாக முன்வைக்கும் கருத்துக்களும், அவற்றின் தராதரமும்.
- போட்டியாளர்களின் சுயமான சிந்தனைகள்

9) **உச்சரிப்புத் திறன்**(20 %)

- முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகளையும் வல்லின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்து அச்சொற்களின் சரியான உச்சரிப்போடு பேசவேண்டும்.
- தூயதமிழ் உச்சரிப்பு கவனிக்கப்படும்.
- சொற்களை விழுங்காது பேசுதல் (குறிப்பாக வசனத்தின் மற்றும் வார்த்தைகளின் இறுதியில் வரும் சொற்கள்) கவனிக்கப்படும்.

10) **பொருள் உணர்ந்து பேசும் திறன்** (25%),

- பொருத்தமான முறையிற் சொற்களைப் பிரித்துப் பேசவேண்டும்.
- ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்தி உச்சரித்துப் பேசுதல்
- வினா, வியப்பிசைக்குறி வரும் இடங்களைத் தகுந்தவாறு கையாளுதல்
  (உ+ ம்:“அது எங்கே ? ” என்பதை “அது எங்கே” போலப் பேசுதல் ஆகாது)

- வசனங்களுக்குத் தகுந்த உணர்ச்சி: (மிகையான உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல், முரணான சைகைகளைப் பயன்படுத்துதல், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் பிடித்தல் போன்றவற்றைத் தவிர்ப்பது நன்று.)

11) **சபை மரபு - ஆதிக்கத்திறன்**(25%)

- மேடைக்குச் செல்லும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையிலே தம்மை வைத்திருத்தல்.(நெளிதல், வளைதல் போன்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும்)
- அடக்கமாகவும், தன்னம்பிக்கையுடனும், சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து பேச்சை ஆரம்பித்தல். உங்களுக்குத் தரப்பட்ட பேச்சில் உள்ள வசனங்களை மட்டுமே பாவித்தல் வேண்டும். மிகைப்படுத்தப்பட்ட வேறு வசனங்களுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
- பேசும்போது உடலை நேராகவும், தளர்வாகவும் வைத்திருத்தல்.
  (விறைப்பாக நிற்பதையும், செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல் வேண்டும்)
- சபையில் உள்ள அனைவரையும் பார்த்து ஒப்புவித்தல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ, நிலம், சுவர், கூரை ஆகியவற்றை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல்.)
- முக பாவனை: பேச்சின் பொருளை உணர்ந்து, அனுபவித்து, இரசித்துப் பேசும் பாங்கு.
- தகுந்த வேகத்துடன் பேச்சை ஒப்புவித்தல்.
  (மிக வேகமாகவோ, மிக மெதுவாகவோ பேசுவதைத் தவிர்த்தல்.)

12) எல்லா விபரங்களுக்கும் போட்டிகளுக்குரிய முழுமையான விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழே தரப்பட்ட வழிகளிற் தொடர்பு கொள்ளவும்.

13) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டிகளில் இருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சைச் சபையின் தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2024
## The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

### வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டிக்கான விதிமுறைகளும் விளக்கங்களும் (இணைப்பு: 5)

1) இப்போட்டி பின்வரும் வயதுப்பிரிவுகளுக்கு நடாத்தப்படும்.

| | | | |
|---|---|---|---|
| ஆரம்பப் பிரிவு | - 5 வயது | கீழ்ப் பிரிவு | - 6-7 வயது |
| மத்திய பிரிவு | - 8-9 வயது | மேற் பிரிவு | - 10-11 வயது |
| அதிமேற் பிரிவு | - 12-14வயது | இளைஞர் பிரிவு | - 15-17 வயது |

2) 2) வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியிலே கேட்கப்படும் கேள்விகளுக்கு, குடும்பங்கள் - தமிழ்க்கல்வி நிலையங்கள் ஆகியவற்றிலும் - தமிழரின் திருமணங்கள் - தமிழ்க் கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் ஒன்றுகூடல்கள் போன்ற பொது வைபவங்களிலும் நாளாந்தம் இடம்பெறும் உரையாடல்களைப் போன்று இயல்பானதாகப் போட்டியாளர்களின் பதில்கள் இருக்கலாம். கேட்கப்படும் கேள்விகள் உலகத் தமிழர் சமுதாயம் சம்பந்தமானதாகவும் அவரவர் வயதுப்பிரிவிற்கேற்ப வேறுபட்ட தரங்களைக் கொண்டதாகவும் இருக்கும். மேற்பிரிவுப் போட்டியாளர்கள் தங்களுடைய பெற்றோரின் தாய்நாடு பற்றியும் அங்குள்ள தற்கால நிலைமை பற்றியும் அறிந்திருத்தல் விரும்பத்தக்கது.

3) இவ்வுரையாடல் சுமார் 3 தொடக்கம் 6 நிமிடங்களுக்கு இடம்பெறும். ஒவ்வொரு போட்டியாளரிடமும் அறிமுகக் கேள்விகளுடன், குறைந்தது 5 கேள்விகள் கேட்கப்படும். உரையாடும் தரத்திற்குமட்டும் புள்ளிகள் வழங்கப்படுமே தவிர, போட்டியாளர்களின் பதில்களிற் சொல்லப்பட்டவற்றின் பொருள் சரியானதோ தவறானதோ என்பதற்காகப் புள்ளிகள் குறைக்கப்படமாட்டாது. ஆரம்பப் பிரிவு சிறுவர்களுக்குப் படங்களைக் காட்டிக் கேள்விகள் கேட்கப்படும்.

4) போட்டியாளர்கள் அனைவரும் போட்டி நடைபெறும் மண்டபத்திற்கு வெளியே ஒரு அறையிலே தங்கும்படி வேண்டப்படுவார்கள். அழைக்கப்படும் போட்டியாளர் மட்டுமே போட்டி நடைபெறும் மண்டபத்திற்கு வர அனுமதிக்கப்படுவார். இப்போட்டிகளின் போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இந்தவேளையில் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். போட்டியாளரின் பெற்றோர் முன்கூட்டியே மண்டபத்தில் வந்து இருக்கலாம் அல்லது தமது பிள்ளைகளை அழைக்கும் போது அவர்களுடன் மண்டபத்திற்குள் வரலாம். ஏற்கனவே போட்டிகளைப் பார்த்த பெற்றோரும், குடும்பத்தினரும், போட்டி நடைபெறும் மண்டபத்தில் இருந்து வெளியே சென்றால் அவர்கள் பின் போட்டியில் பங்குபற்ற இருக்கின்ற தமது பிள்ளைகளைச் சந்திக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

5) வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் ஆரம்ப இலக்கங்களைப் பெற்ற போட்டியாளர்களும், அவர்களது பெற்றோர்களும் போட்டி ஆரம்பமாகி 30 நிமிடங்கள் வரை போட்டி நடைபெறும் மண்டபத்திலிருந்து வெளியே செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

6) போட்டியின் போது **உச்சரிப்பு (20 %)**, **சொற்பிரயோகம் (30 %), உரையாடும் திறன் மற்றும் பங்குபற்றும் நிலை (50%)** ஆகியன கவனிக்கப்படும்.

7) **உச்சரிப்புத் திறன் (20%)**

- பிராந்தியப் பேச்சு வழக்கு: அதாவது இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் நடைமுறையில் உள்ள தமிழ் உச்சரிப்புகளும், அங்கு வதிவோர் பேச்சு வழக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.
- முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகள்
- வல்லின, இடையின, மெல்லின வேறுபாடு அறிந்து தெளிவாக உரையாடுதல், தூய தமிழ் உச்சரிப்பு
- சொற்களை விழுங்காது உரையாடுதல்

8) **சொற்பிரயோகம் (30 %)**

- தெளிவான, தூய தமிழ் மொழி நடையாக உரையாடல் இருத்தல் வேண்டும்.
- உரையாடலின் போது ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தினால் புள்ளிகள் குறைக்கப்படும்.
  (உதாரணம்: 'பந்து' என்பதற்குப் பதிலாக 'Ball' என்று பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டும்).
- ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு உரிய தமிழ்ப்பதம் இல்லாதவிடத்தில் (அல்லது உரிய தமிழ்ப்பதம் பாவனையில் அதிகம் இல்லாதவிடத்தில்) அதே சொல்லை அதே உச்சரிப்புடன் பயன்படுத்தலாம். உ+ம்: Australia, Calculator, Video, DVD, CD எனும் பொதுப்பாவனையிலுள்ள சொற்கள் ஏற்கப்படும்.
- கேள்விகள் விளங்காவிட்டால், போட்டியாளர் அந்தக் கேள்விகளை மீண்டும் ஒரு முறை வினாவும்படி கேட்கலாம். அப்படியும் கேள்விகள் விளங்காத சந்தர்ப்பத்தில், இலகுவான விதத்தில் கேள்விகள் கேட்கப்படும்.

9) **உரையாடும் திறன் மற்றும் பங்குபற்றும் நிலை (50 %)**

- பல விதமான வினாக்களுக்கும் சரியான அளவான பதில் அளிக்கும் தன்மை.
  - விரிவான பதில்களை எதிர்பார்த்துக் கேட்கப்படும் வினாக்களுக்கு விரிவான பதில்

  உ+ம்: உங்களுடைய மறக்கமுடியாத ஒரு சம்பவம் பற்றிக் கூறுங்கள்?
  - சுருக்கமான பதில் எதிர்பார்க்கப்படும் வினா,

  உ+ம்: உங்களுக்குப் பிடித்த ஒரு பறவையின் பெயரைச் சொல்லுங்கள்?
- சரளமாக உரையாடும் தன்மை. அநாவசியமான, அளவிற்கதிகமான, அதிகப்பிரசங்கித்தனமான, உரையாடலுக்கும், வெட்டு ஒன்று துண்டு இரண்டு போல் அமையும் ஒரு வரிப் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.
- உரையாடலை இரசித்துப் பங்குகொள்ளும் தன்மை. உணர்ச்சிகளுக்கு ஏற்றவாறு முகபாவனைகளை வெளிப்படுத்தும் ஆற்றல்
- போட்டியாளர்கள் நடுவர்களைப் பார்த்துத் தன்னம்பிக்கையுடன் உரையாடுதல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ, நிலம், சுவர், கூரை ஆகியவற்றை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல் வேண்டும். உரையாடலின் போதும் கேள்விகள் கேட்கப்படும் போதும் அலட்சியமாக இருப்பதைத் தவிர்த்தல் வேண்டும்).
- அடக்கமாகவும், நடுவர்களை மரியாதை செய்தும் உரையாடுதல்.
- கேள்வி கேட்கப்படும் போது குறுக்கீடு செய்யக்கூடாது. குறுக்கீடு செய்வதனால் கேள்வியை அவதானிக்காது, திரும்பவும் கேள்வியைக் கேட்டால் அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- சைகைகளினால் வழங்கப்படும் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

## எழுத்தறிவுப் போட்டிகளின் விதிமுறைகளும் விளக்கங்களும் (இணைப்பு: 6)

1. கீழ்ப்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (6-7 வயது): இது ஒரு மணி நேரப் பரீட்சை ஆகும்.
2. மத்தியபிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (8-9 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும்.
3. மத்தியபிரிவிற்கான அடிப்படை எழுத்தறிவுப் போட்டி (8-9 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும்.
4. மேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (10-11 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும்.
5. மேற்பிரிவிற்கான அடிப்படை எழுத்தறிவுப் போட்டி (10-11 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும்.
6. அதிமேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (12-14 வயது): இது 2 மணி நேரப் பரீட்சை ஆகும்.
7. அதிமேற்பிரிவிற்கான அடிப்படை எழுத்தறிவுப் போட்டி (12-14 வயது): இது 2 மணி நேரப் பரீட்சை ஆகும்.
8. இளைஞர் பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (15-17 வயது): இது 2 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும்.
9. அதிமேற்பிரிவிற்கும் இளைஞர் பிரிவுக்குமான பரீட்சைத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்.
    - <u>முதலாம் பகுதியில்</u> உள்ள வினாக்களுக்குத் தரப்பட்ட பந்திகளில் இருந்து சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து அடையாளமிடுவதாகவோ அல்லதுகோடிட்ட இடங்களை நிரப்புவதாகவோ அல்லது வாக்கியம் அமைப்பதாகவோ இருக்கும்.
    - <u>இரண்டாவது பகுதியிலே,</u> கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து 250 சொற்களுக்குக் கூடாமல் கட்டுரை அல்லது கடிதம் ஒன்றினை எழுதும்படி கேட்கப்படுவர். இதிலே தலைப்பின் பொருள்விளக்கம், கட்டுரை-கடிதத்தின் அமைப்பு, இலக்கண சுத்தி என்பன கவனிக்கப்படும்.
10. இளைஞர் பிரிவிற்கான பரீட்சைத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்.
    - <u>வாசிப்பதற்</u>கும் பதிலளிப்பதற்கும்(**Reading and Responding**) கேட்கப்படும் வினாக்கள்,உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாசிப்புப் பகுதியிலிருந்து கேட்கப்படும்.
    - கேட்டபின்பு பதிலளிப்பதற்குக் (**Listening and Responding**) கேட்கப்படும் வினாக்கள், நீங்கள்கேட்ட பகுதியிலிருந்து கேட்கப்படும்.
    - எழுதுவதற்குக் (**writing**) - கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 200 சொற்களிற்குக் குறையாமலும் 250 சொற்களுக்குக் கூடாமலும் ஒரு கட்டுரை எழுதும்படி கேட்கப்படுவீர்கள். இதிலே தலைப்பின் பொருள் விளக்கம், கட்டுரை அமைப்பு, இலக்கண சுத்தி என்பன கவனிக்கப்படும்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2024
## The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

11. எழுத்தறிவுப் போட்டிகள் நியூசவுத் வேல்ஸ் தமிழ் பாடசாலைகளின் பாடத்திட்டத்தைத் தழுவியதாக அமையும். அவுஸ்திரேலிய மொழிக்கல்வி தொடர்பான அணுகுமுறையும், விடயதானமும், அடைவுகளும் எல்லா மாநிலங்களுக்கும் பொதுவானவை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். அடிப்படை எழுத்தறிவுப் போட்டி தமிழிற் பின்தங்கிய மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் நடாத்தப்படுகின்றது.
12. எழுத்தறிவுப் போட்டிகள் மாநில, தேசிய மட்டங்களில் நடாத்தப்படுகின்றன. எனவே மாநில மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். அவுஸ்திரேலிய, நியூசிலாந்து மாணவர்களிடையே முதற் பரிசு பெறும் போட்டியாளருக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம். அடிப்படை எழுத்தறிவுப் போட்டி மாநில மட்டத்தில் மட்டுமே நடைபெறும்.
13. "விசேட எழுத்தறிவுப் போட்டி - இளைஞர் பிரிவு" ஓர் பயிற்சி பரீட்சையாக நடாத்தப்படுவதுடன் பரீட்சை முடிவுகள் தனிப்பட்ட முறையில் மாணவர்களுக்கு மட்டும் தெரியப்படுத்தப்படும். இப்போட்டிக்கு தேசிய/மாநில நிலையோ பதங்கங்களோ வழங்கப்படாது.
14. ஒவ்வொரு பிரிவிற்கும் தரப்படும் புதிய கேள்விகளோடு கடந்த வருடப் பரீட்சைகளிற் கொடுக்கப்பட்ட சில வினாக்களும் இடம்பெறலாம்.
15. கடந்த ஆண்டு (2006 - 2021) எழுத்தறிவுப் போட்டிகளுக்கான வினாத்தாள்கள் எமது இணையத்தளத்திலிருந்து (**www.tamilcompetition.org.au**). பெறலாம்.
16. அடிப்படை எழுத்தறிவுப் போட்டிகளுக்கான மாதிரி வினாத்தாள்கள் எமது இணையத்தளத்திலிருந்து (**www.tamilcompetition.org.au**) பெறலாம்.
17. எழுத்தறிவுப் போட்டியாளர்கள் போட்டி முடிவடைந்த பின்னரே மண்டபத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்படுவர்.

தமிழ் ஊக்குவிப்புக் குழு,
அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2024
## The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

### விவாதப் போட்டிக்களுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும் (இணைப்பு: 7)

1. போதிய குழுக்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் போட்டிகள் அரை இறுதிப் போட்டி, இறுதிப் போட்டி என்ற இருநிலைகளில் இடம் பெறும். போட்டிகளுக்கான தலைப்புகள் போட்டியிடும் குழுவினருக்கு அறிவிக்கப்படும்.
2. இப்போட்டியில் மேற்குறிப்பிட்ட வயதுப்பிரிவுக்குட்பட்ட தகுதியுடைய போட்டியாளர்கள் மூன்று போட்டியாளர்களைக் கொண்ட தனித்தனிக் குழுக்களாக விண்ணப்பிக்க வேண்டும்.
3. போட்டியாளர்கள் விவாதத்தின் போது துணைக்குறிப்புகளைப் பயன்படுத்தலாம். ஆனால் தமது விவாதத்தினை எழுத்துப் பிரதியிலிருந்து வாசிக்கக் கூடாது. எழுத்துப் பிரதியிலிருந்து வாசிக்கும் போட்டியாளர்களுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
4. விவாதக் குழுவினைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் தனித் தனியே 5 நிமிடங்கள் கொடுக்கப்படும். 5 நிமிடங்கள் முடிந்ததும் மணி ஒருமுறை அடிக்கப்படும். தொடர்ந்து அவர் பேசினால் 30 வினாடிகளுக்குப் பின் மணி இரு முறை அடிக்கப்படும். இரண்டாவது மணி அடித்தவுடன் அவர் பேச்சை நிறுத்த வேண்டும். 5 நிமிடங்களுக்கு மேலாகப் பேசுமிடத்தும், 3 நிமிடங்களுக்குக் குறைவாகப் பேசுமிடத்தும் புள்ளிகள் குறைக்கப்படும்.
5. ஒவ்வொரு அணியையும் சேர்ந்த மூன்று போட்டியாளர்களும் பேசி முடிந்தபின் விவாதக் குழுவின் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் விவாதத்தினை முடித்துத் தொகுப்புரை வழங்குவதற்கு 3 நிமிடங்கள் கொடுக்கப்படும். ஆதரித்துப் பேசும் குழுவின் தலைவர் விவாதத்தை முடித்து வைப்பார்.
6. விவாதத்திற் கவனிக்கப்படும் அம்சங்கள் மற்றும் புள்ளிகள் வழங்கப்படும் விபரங்கள்:
   - ❖ ஒருவர் தனது அணிக்கு ஆதரவாக முன்வைக்கும் கருத்துக்களும், அவற்றின் தரமும்
   - ❖ எதிர் அணியினர் கூறிய கருத்துக்களுக்கு மறுத்துக் கூறும் கருத்துக்களும், அவற்றின் தரமும்
   - ❖ தேவை ஏற்படின் ஒரு அணியினர் ஏற்கனவே முன்வைத்த கருத்தை மீண்டும் வலியுறுத்திக் கூறலாம். ஆனால் தேவையற்ற சந்தர்ப்பத்தில் அந்த அணியினர் ஏற்கனவே முன்வைத்த கருத்தை மீண்டும் கூறுவதால் எவ்வித மேலதிக புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது.
   - ❖ அணித் தலைவர் தனது தொகுப்புரையில் அவரது அணி முன்வைத்த கருத்துகளின் சாராம்சத்தை வழங்கவேண்டும். அத்துடன் அந்த அணியினர் மறுத்துக் கூறிய கருத்துக்களையும் தொகுத்து வழங்குவதன் மூலம், தனது அணியின் கருத்து-பேச்சு வன்மையை நிலை நிறுத்த வேண்டும்.
   - ❖ விவாதக் களத்திலே தலைப்போடு ஒன்றிய விடயங்கள் மட்டுமே பேசப்படவேண்டும். வாதியையோ, பிரதிவாதியையோ தனிப்பட்ட முறையிற் சாடுவதையும், அவரவர் தனிப்பட்ட விடயங்களைப் பற்றிப் பேசுவதையும் தவிர்க்கவேண்டும்.
7. விவாதம் பற்றிய பொதுவான விளக்கங்களையும், மேலதிக தகவல்களையும் `world debate website' http://www.flynn.debating.net/sydrules.htm என்ற இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
8. விவாதக் குழுக்கள் எந்தெந்தத் தரப்பில் வாதிடுவர் என்பது சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும். அரை இறுதிப் போட்டிகள் மூலம் இறுதிப்போட்டியிற் பங்குபற்றத் தகுதி உடைய குழுக்கள் தேர்ந்தெடுக்கப்படும். அரை இறுதிப் போட்டி முடிவடைந்ததும் இறுதிப் போட்டிக்கான தலைப்புக் கொடுக்கப்படுவதுடன் விவாதத்தை ஆதரித்தோ எதிர்த்தோ பேசுவதற்கான ஒழுங்கு, சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
9. ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் இறுதிப் போட்டியிற் பங்குபற்றிச் சிறந்ததெனத் தெரிந்தெடுக்கப்படும் குழுவிற்கு முதற்பரிசும் அடுத்த குழுவிற்கு ஆறுதற்பரிசும் வழங்கப்படும்.
10. மற்றைய போட்டிகளுக்கான பொது விதிமுறைகளையும் பார்க்கவும்.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2024
## The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

### குழு வினாடி - வினாப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும் (இணைப்பு: 8)

1. போதிய குழுக்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் போட்டிகள் அரை இறுதிப் போட்டி, இறுதிப் போட்டி என்ற இருநிலைகளில் இடம் பெறும்.

2. இப்போட்டி 15, 18 வயதிற்கு உட்பட்ட பிரிவுகளில் நடைபெறும். இப்போட்டியிற் பங்குபற்ற விரும்புவோர் ஐந்து போட்டியாளர்களைக் கொண்ட குழுக்களாக விண்ணப்பிக்க வேண்டும்.

3. கேட்கப்படும் கேள்விகள் தமிழ் மொழி, மற்றும் கலாசாரம் சம்பந்தப்பட்டதாக இருக்கும். அத்துடன் சில வரலாறு தொடர்பான கேள்விகளும், பொதுக்கேள்விகளும் கேட்கப்படும்.

4. வினா கேட்கப்பட்ட போட்டியாளர் தனது குழுவிலுள்ள மற்றவர்களுடன் **கலந்தாலோசிக்காது**, அந்த வினாவிற்கான சரியான பதிலை அளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். அவர் பிழையாகப் பதிலளித்தாலோ அல்லது தனக்குக் கொடுக்கப்பட்ட 30 வினாடிகளுக்குள் பதிலளிக்காது விட்டாலோ, அதே குழுவினைச் சேர்ந்த வேறு எவராவது தங்கள் குழுவினருடன் **கலந்தாலோசித்தபின்** சரியான பதிலளித்தால் 3 புள்ளிகள் வழங்கப்படும். கேட்கப்பட்ட குழு பதிலளிக்கத்தவறினால் எதிர் அணியினரிடம் அந்த வினா கேட்கப்படும். எதிர் அணியினர் தங்கள் குழுவினருடன் **கலந்தாலோசித்தபின்** யாராவது ஒருவர் அந்த வினாவிற்குப் பதிலளிக்கும் சந்தர்ப்பத்தில் அக்குழுவுக்கு 2 புள்ளிகள் வழங்கப்படும். பதிலளிப்பதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 30 வினாடிகள் கொடுக்கப்படும். பிழையான விடைகளுக்குப் புள்ளிகள் எதுவும் கழிக்கப்படமாட்டாது.

5. வினாக்கள் மாறிமாறி இரு குழுக்களிடையேயும் கேட்கப்படும். ஒவ்வொரு குழுவிலும் கேள்விகள் முதலாம் போட்டியாளரிலிருந்து இறுதிப் போட்டியாளர் வரை கேட்கப்படும். விடைகளைத் தெளிவான உச்சரிப்புடன் நடுவர்களுக்குக் கேட்கும்வண்ணம் வழங்கவேண்டும்.

6. போட்டிகள் இரண்டு சுற்றுகளாக நடைபெறும். இரண்டாவது சுற்றின் பின் கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறும் அணி வெற்றி பெறும். அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி, இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும். இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி முதற்பரிசையும், இரண்டாவதாக வரும் அணி ஆறுதற் பரிசையும் பெறும்.

7. இறுதிச் சுற்றில் இரு அணிகளும் ஒரேயளவு புள்ளிகளைப் பெறுமிடத்து மூன்றாம் சுற்று நடாத்த வேண்டிய தேவை ஏற்படலாம். மூன்றாம் சுற்றில் ஒவ்வொரு கேள்விக்கும் குழுநிலையில் விடை அளிக்க அனுமதியளிக்கப்படும். குழுவின் தலைவர் குழு அங்கத்தவர்களிடம் கலந்துரையாடியபின், 30 வினாடிகளுக்குள் தமது விடையைத் தெரிவிக்க வேண்டும். அவர்கள் சரியான விடையை அளிக்கத் தவறும் பட்சத்தில், எதிர் அணியினரிடம் அந்த வினா கேட்கப்படும். அதற்கான விடையை எதிரணியும் குழு நிலையில் ஆலோசித்தபின் அக்குழுவின் தலைவர் இந்த வினாவிற்கான விடையை 30 வினாடிகளுக்குள் அளிக்கலாம்.

8. கடந்த ஆண்டில் நடைபெற்ற வினாடி – வினாப் போட்டிகளுக்கான கேள்விகளை எமது இணையத்தளத்திலிருந்து (www.tamilcompetition.org) பெறலாம்.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2024
## The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

### தனிநடிப்புப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும் (இணைப்பு: 9)

1. 12 வயதுக்குட்பட்டோர் விசேட பிரிவில் இப்போட்டி நடைபெறும். போட்டியாளர் தமக்குக் கொடுக்கப்படும் கருப் பொருளைத் தெளிவாக விளக்கும் வகையில் நடித்துக் காட்ட வேண்டும். இந்த நடிப்பு 3 நிமிடங்களுக்குக் குறையாமலும்,5 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

2. **போட்டிக்கான கருப்பொருள் "உன்னை நீ அறிவாய்"** என்பதாகவோ அல்லது நீங்கள் தெரிவுசெய்யும் பொருத்தமான வேறொரு கருப்பொருளாகவோ அமையலாம். இவ்வாறு தெரிவுசெய்யப்படும் கருப் பொருளைப் போட்டியாளர் தெளிவாக விளக்கும் வகையில் நடித்துக் காட்ட வேண்டும்.

3. போட்டியாளரின் நடிப்பிலே பின்வரும் அம்சங்கள் கவனிக்கப்படும். **கருப்பொருளைத்** தெளிவாக விளக்கும் **நடிப்பாற்றல் (30%),பாத்திரத்தோடு ஒன்றியநடிப்பு(50%), மேடை உத்திகள், ஒப்பனை (20%)**என்ற விகிதாசாரத்தின் அடிப்படையிற் புள்ளிகள் கணிக்கப்படும்.

4. **கருப்பொருளைத்** தெளிவாக விளக்கும் **நடிப்பாற்றல் (30%),**
   - போட்டியாளர் எடுத்துக் கொண்ட தலைப்புச் செய்தியானது (கருத்து)சமூக விழுமியங்களுடன் இசைவுடையதாக இருத்தல் வேண்டும்.
   - உங்கள் தயாரிப்புச் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.
   - நெறியாள்கையும் கவனத்திற் கொள்ளப்படும்.

5. **பாத்திரத்தோடு ஒன்றியநடிப்பு(50%)**
   - எடுத்துக் கொண்ட கதாபாத்திரத்தை அல்லது கருத்தைச் சரியாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்தும் முகமாக நடித்தல்.
   - மேடை நடிப்பின் அடிப்படை அம்சங்களுக்கு அமைய நடித்தல் (மேடைக் கூச்சத்தைத் தவிர்த்தல் வேண்டும்: நடித்துக் காட்டுதல்: அங்க அசைவுகளும் அவற்றின் மேல் நடிப்பவரின் கட்டுப்பாடும், தெளிவான விளக்கமான நடிப்பு சொற்பிரயோகம், இயல்பான நடிப்பு.
   - வசனங்களுக்குத் தகுந்த உணர்ச்சி:(மிகையான உணர்ச்சிகளை வெளிப்படுத்தல், முரணான சைகைகள் பயன்படுத்தல்,செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் பிடித்தல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.)
   - தொய்வில்லாத நடிப்புத் தொடர்ச்சியும் ஒழுங்கமைக்கப்பட்ட நடிப்பும்.

6. **மேடை உத்திகள், ஒப்பனை (20%),**
   - நடிப்பு உத்திகள் - உ + ம்: குறியீடுகள், பல பாத்திரங்கள் ஏற்றல், மேடைப் பயன்பாடு
   - ஒப்பனையானது கதாபாத்திரத்திற்கும், எடுத்துக் கொண்ட கருப் பொருளுக்கும் இயைபாக இருக்கவேண்டும். ஒவ்வாத, மிகையான ஒப்பனையைத் தவிர்க்க வேண்டும்.
   - ஒலி, ஒளி, மேடை அமைப்புக்குப் புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.
   - மேடையில் அன்று கிடைக்கக்கூடிய வசதிகளைத் தவிர எந்த மேடை வசதிகளும் செய்து கொடுக்கப்பட மாட்டாது. மேடை விபரங்களைப் பற்றி அறிய விரும்பின் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.
   - மேடை அமைப்புக்கு மேலதிக நேரம் வழங்கப்பட மாட்டாது. மேடை அமைப்பு ஏனைய போட்டியாளர்களுக்கு இடையூறாக இருக்காது பார்த்துக் கொள்ளவேண்டும்.

7. போட்டிகளுக்கான பொது விதிமுறைகளை மற்றைய போட்டிகளின் விதிமுறைகளிற் பார்க்கவும்.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

இணைப்பு: 10

# கவிதை மனனப் போட்டி
# பாலர் பிரிவு (5 வயதின்கீழ்)

(பிறந்த திகதி: 01.07.2019 க்குப்பின் பிறந்தோர்)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## சோர்ந்துவிடல் ஆகாது பாப்பா!

துன்பம் நெருங்கி வந்த போதும்-நாம்
சோர்ந்துவிடல் ஆகாது பாப்பா!
அன்பு மிகுந்ததெய்வம் உண்டு-துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா!

நன்றி, வணக்கம்.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

இணைப்பு: 11

# கவிதை மனனப் போட்டி
# ஆரம்ப பிரிவு (5 வயது)

(பிறந்த திகதி: 01.07.2018 - 30.06.2019)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா!

ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா!
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா!
களி படைத்த மொழியினாய் வா வா வா!
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா!

தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா!
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா!
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா!
ஏறுபோல் நடையினாய் வா வா வா!

நன்றி, வணக்கம்.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

இணைப்பு: 12

# கவிதை மனனப் போட்டி
## கீழ்ப் பிரிவு (6 - 7 வயது)

(பிறந்த திகதி: 01.07.2016 - 30.06.2018)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்துநின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!
துச்சமாக எண்ணிநம்மைத் தூறுசெய்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!
பிச்சைவாங்கி உண்ணும்வாழ்க்கை பெற்றுவிட்ட போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!

இச்சைகொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!
நச்சைவாயி லேகொணர்ந்து நண்பரூட்டு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!

நன்றி, வணக்கம்.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

இணைப்பு: 13

## ஆத்திசூடி போட்டி
## விசேட பாலர் பிரிவு (5 வயதின் கீழ்)

(பிறந்த திகதி: 30.06.2019 க்குப்பின் பிறந்தோர்)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

### ஔவையார் அருளிய ஆத்திசூடி

**தூக்கி வினை செய்**
*இதன் பொருள்* - நன்கு ஆராய்ந்து எந்தச் செயலையும் செய்.

**தெய்வம் இகழேல்**
*இதன் பொருள்* - கடவுளை இகழ்ந்து பேசாதே.

**தொன்மை மறவேல்**
*இதன் பொருள்* - பழையனவற்றை மறந்து விடாதே.

நன்றி, வணக்கம்.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

இணைப்பு: 14

# ஆத்திசூடி போட்டி
# விசேட ஆரம்பப் பிரிவு (6 வயதின் கீழ்)

(பிறந்த திகதி: 30.06.2018 க்குப்பின் பிறந்தோர்)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## ஔவையார் அருளிய ஆத்திசூடி

**துன்பத்திற்கு இடம் கொடேல்**
*இதன் பொருள்* - ஒரு காரியத்தைச் செய்யும் போது உடல் வருத்தம் பாராதே.

**தூக்கி வினை செய்**
*இதன் பொருள்* - நன்கு ஆராய்ந்து எந்தச் செயலையும் செய்.

**தெய்வம் இகழேல்**
*இதன் பொருள்* - கடவுளை இகழ்ந்து பேசாதே.

**தொன்மை மறவேல்**
*இதன் பொருள்* - பழையனவற்றை மறந்து விடாதே.

**நன்மை கடைப்பிடி**
*இதன் பொருள்* - நன்மையான காரியங்களையே எப்போதும் செய். .

**நாடு ஒப்பன செய்**
*இதன் பொருள்* - நாட்டில் உள்ள பலரும் ஒத்துக்கொள்ளத்தக்க நல்ல காரியங்களைச் செய்.

**நிலையில் பிரியேல்**
*இதன் பொருள்* - உன்னுடைய நிலையில் இருந்து என்றும் தாழ்ந்து விடாதே.

நன்றி, வணக்கம்.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

# திருக்குறள் போட்டி

இணைப்பு: 15

## விசேட மத்திய பிரிவு (10 வயதின் கீழ்)

(பிறந்த திகதி: 30.06.2014க்குப்பின் பிறந்தோர்)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## அதிகாரம் 62 - ஆள்வினை உடைமை

குறள் 611

**அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.**

***இதன் பொருள்*** - இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வுறாமல் இருக்க வேண்டும்; அதைச் செய்வதற்குத் தக்க பெருமையை முயற்சி உண்டாக்கும்.

குறள் 612

**வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.**

***இதன் பொருள்*** - தொழிலை முழுமையாகச் செய்யாமல் கைவிட்டவரை உலகம் கைவிடும்; ஆகையால் தொழில் முயற்சி இல்லாதிருத்தலை ஒழிக்க வேண்டும்.

குறள் 613

**தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னும் செருக்கு.**

***இதன் பொருள்*** - பிறர்க்கு உதவி செய்தல் என்னும் மேம்பட்ட நிலைமை முயற்சி என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த பண்பில் நிலைத்திருக்கின்றது.

குறள் 614

**தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாள்ஆண்மை போலக் கெடும்.**

***இதன் பொருள்*** - முயற்சி இல்லாதவன் உதவி செய்பவனாக இருத்தல், பேடி தன் கையில் வாளை எடுத்தும் ஆளும் தன்மைபோல் நிறைவேறாமல் போகும்.

குறள் 615

**இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்துஊன்றும் தூண்.**

***இதன்பொருள்*** - தன் இன்பத்தை விரும்பாதவனாய் மேற்கொண்ட செயலை முடிக்க விரும்புகிறவன், தன் சுற்றத்தாரின் துன்பத்தைப் போக்கித் தாங்குகின்ற தூண் ஆவான்.

நன்றி, வணக்கம்.

*(மூலம்: "திருக்குறள் தெளிவுரை", டாக்டர்.மு.வரதராசனார், திருத்திய 205ஆவது பதிப்பு நவம்பர் 2008.)*

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

## திருக்குறள் போட்டி — இணைப்பு: 16

## விசேட அதிமேற் பிரிவு (15 வயதின் கீழ்)

(பிறந்த திகதி: 30.06.2009 க்குப்பின் பிறந்தோர்)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## அதிகாரம் 62 - ஆள்வினை உடைமை

குறள் 611

**அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.**

***இதன் பொருள்*** - இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வுறாமல் இருக்க வேண்டும்; அதைச் செய்வதற்குத் தக்க பெருமையை முயற்சி உண்டாக்கும்.

குறள் 612

**வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.**

***இதன் பொருள்*** - தொழிலை முழுமையாகச் செய்யாமல் கைவிட்டவரை உலகம் கைவிடும்; ஆகையால் தொழில் முயற்சி இல்லாதிருத்தலை ஒழிக்க வேண்டும்.

குறள் 613

**தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னும் செருக்கு.**

***இதன் பொருள்*** - பிறர்க்கு உதவி செய்தல் என்னும் மேம்பட்ட நிலைமை முயற்சி என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த பண்பில் நிலைத்திருக்கின்றது.

குறள் 614

**தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாள்ஆண்மை போலக் கெடும்.**

***இதன் பொருள்*** - முயற்சி இல்லாதவன் உதவி செய்பவனாக இருத்தல், பேடி தன் கையில் வாளை எடுத்தும் ஆளும் தன்மைபோல் நிறைவேறாமல் போகும்.

குறள் 615

**இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்துஊன்றும் தூண்.**

***இதன்பொருள்*** - தன் இன்பத்தை விரும்பாதவனாய் மேற்கொண்ட செயலை முடிக்க விரும்புகிறவன், தன் சுற்றத்தாரின் துன்பத்தைப் போக்கித் தாங்குகின்ற தூண் ஆவான்.

குறள் 616

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**

***இதன்பொருள்*** - முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும்; முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும்.

குறள் 617

**மடிஉளாள் மாமுகடி என்ப மடிஇலான்**
**தாள்உளாள் தாமரையி னாள்.**

***இதன்பொருள்*** - ஒருவனுடைய சோம்பலில் கரிய மூதேவி வாழ்கின்றாள்; சோம்பல் இல்லாதவனுடைய முயற்சியிலே திருமகள் வாழ்கின்றாள்.

குறள் 618

**பொறிஇன்மை யார்க்கும் பழிஅன்று அறிவுஅறிந்து**
**ஆள்வினை இன்மை பழி.**

***இதன்பொருள்*** - நன்மை விளைக்கும் ஊழ் இல்லாதிருத்தல் யார்க்கும் பழி அன்று; அறிய வேண்டியவற்றை அறிந்து முயற்சி செய்யாதிருத்தலே பழி.

குறள் 619

**தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.**

***இதன்பொருள்*** - ஊழின் காரணத்தால் ஒரு செயல் முடியாமல் போகுமாயினும், முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது கொடுக்கும்.

குறள் 620

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்**
**தாழாது உஞற்று பவர்.**

***இதன்பொருள்*** - சோர்வு இல்லாமல் முயற்சியில் குறைவு இல்லாமல் முயல்கின்றவர், செயலுக்கு இடையூறாக வரும் ஊழையும் ஒரு காலத்தில் தோல்வியுறச் செய்வர்.

நன்றி, வணக்கம்.

*(மூலம்: "**திருக்குறள் தெளிவுரை**", டாக்டர்.மு.வரதராசனார், திருத்திய 205ஆவது பதிப்பு நவம்பர் 2008.)*

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

இணைப்பு: 17

## பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு

(பிறந்த திகதி: 01.07.2014 - 30.06.2016).

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

# தன்னம்பிக்கை

சாதனை படைத்தவர்களின் பாதையை நாம் பின்பற்றினால் எமக்கும் வெற்றி நிச்சயம் என்று நம்மிற் பலர் நம்புகிறோம். சாதனையாளர்கள் 'அயராது உழைத்தல்', 'பரந்த எண்ணம்', 'மன உறுதி' போன்ற பல விடயங்களை உறுதியாகக் கடைப்பிடிப்பார்கள். இவை எல்லாம் வெற்றிக்கு வழி வகுப்பவைதான். ஆனாலும், எப்பொழுது ஒருவரின் தன்னம்பிக்கை தளர்ந்து விடுகின்றதோ அதன் பின்னர் அவர் தனது குறிக்கோளில் வெற்றி பெற முடியாது!

மனதில் உறுதி இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என்பது உண்மைதான். ஆனால் நாம் தடுமாறும் போதெல்லாம் எம்மைத் தூக்கி நிறுத்துவது தன்னம்பிக்கைதான் என்பதை மறந்துவிடக் கூடாது.

தோல்வியைச் சந்திக்காத மனிதர் என்று எவரும் இல்லை. ஆகையால் தோல்விகளைக் கண்டு மனம் தளர்ந்து விடக்கூடாது! பரீட்சையில் நாம் நினைத்த புள்ளிகளைப் பெறாவிட்டால் என்ன? 'அடுத்த முறை நடக்கும் பரீட்சையில் அப்புள்ளிகளைப் பெறுவேன்' என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்த எண்ணமே வெற்றிக்கான முதற்படி. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் அன்றோ?

நன்றி, வணக்கம்.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

இணைப்பு: 18

## பேச்சுப்போட்டி - மேற்பிரிவு

(பிறந்த திகதி: 01.07.2012 - 30.06.2014)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

# தளர்வறியா மனம் வேண்டும்!

நம் வாழ்வில் நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தளர்வென்பதை நாம் அறியமாட்டோம். ஆனால் வெற்றியும் தோல்வியும் கலந்தது தானே வாழ்க்கை? இன்பத்தைக் கண்டு மகிழும் நாம், துன்பத்தைக் கண்டு துவண்டு போகலாமா? மனம் தளர்ந்து போனால், பின் மார்க்கம் காண்பது எப்படி?

முயற்சி தளர்ந்து விட்டால் சோம்பல் குடி கொண்டு விடும். ‘முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்’ என்கிறார் வள்ளுவர். முடியாது என்று முடிவு செய்ய முன்னர் முயற்சி செய்து பார்க்க வேண்டும். முடிந்து போன ஒன்றை நினைத்து வருந்தக் கூடாது. உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் மீண்டும் முயல வேண்டும். சறுக்கினாலும், அதை ஒரு சவாலாக எடுத்துக் கொள்ள வேண்டும். படிப்பிலோ, விளையாட்டிலோ எதிர்பார்த்த வெற்றி கிடைக்காமல் போகலாம். வாழ்க்கையில் வரும் தோல்விகளைக் கண்டு அச்சம் கொள்ளக் கூடாது. தோல்விகளில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஏமாற்றம் ஏற்பட்டால், அதை ஏற்கப் பழக வேண்டும்.

தளராத உறுதியும், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியுமே வெற்றிக்கான படிக்கற்கள். நல்லது என்று நம்புவதை முடிக்கும் தளராத மனம் எமக்கு இருக்க வேண்டும். இதையே ‘திண்ணிய நெஞ்சம் வேண்டும்’ என்கிறார் பாரதியார். தெளிவான நோக்கமும், அதை செயற்படுத்தும் திட்டமும் இருந்து விட்டால் போதும், எதையும் சாதித்து வெற்றி காணலாம்.

தளர்வறியா மனம் கொள்வோம்! வரும் தடைகளைத் தகர்த்திடுவோம்!

நன்றி, வணக்கம்.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

இணைப்பு: 19

## பேச்சுப்போட்டி - அதிமேற் பிரிவு

(பிறந்த திகதி: 01.07.2009 - 30.06.2012)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

# நிலைகொள் மனமே!

ஒவ்வொரு செயலிலும் வெற்றியைத் தேடியே நாம் எல்லோரும் ஓடிக்கொண்டிருக்கிறோம். வெற்றிதான் எவ்வளவு இனிமையானது. வெற்றிக்கான பாதையில் நாம் மனம் தளராமல் இயங்கவேண்டும்.

வெற்றி அற்புதமானதுதான். ஆனால் வெற்றியின் பெருமிதத்தில் திளைக்கும் அதே மனந்தான் தோல்வியைக் கண்டதும் துவண்டு விடுகிறது. சுவாமி விபுலானந்தர் கங்கையில் விடுத்த ஓலை எனும் கவிதையில், மனதின் வினோதத்தை இவ்வாறு எடுத்துரைக்கிறார்.

”இன்ப விளையாட்டினிடை மேலெழுந்து குதிப்பர்
எமக்கு நிகர் ஆர் என்பர் -இருகணத்தில்
துன்பமுறச் சோர்ந்தழுவார்”

நிலையில்லாமல் அலைபாயும் மனதிற்கு, வெற்றி ஒரு போதையைத் தருகிறது. அந்த போதையில் மதிமயங்கி, கடமை தவறி,வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் பலர். வெற்றியைக் கொண்டாடும் நம்மில் பலர் தோல்வியை எதிர்கொள்ளத் துணிவதில்லை. சிலவேளைகளில் சின்னச் சின்னச் சிக்கல்களுக்கே மனம் உடைந்து போகிறோமல்லவா? இன்னும் சொல்லப் போனால் தோற்றுவிடுவோமோ என்ற அச்சத்தால் பலர் முயற்சி செய்யவே தயங்குகிறார்கள்.

மனிதநேயம், அன்பு போன்ற நற்பண்புகளைச் சிலர் கருத்திற் கொள்வதில்லை. வெறும் வெற்றி தோல்வியில் மட்டுமே தங்களுடைய சுய மதிப்பை அளவிடுகிறார்கள். தம்மைச் சுற்றியுள்ளவர்களையும் இந்த அளவுகோலோடுதான் பார்க்கிறார்கள். இவ்வாறான மனநிலை கொண்டவர்கள், தங்களுடைய சொந்த மன ஆரோக்கியத்துக்கு மட்டும் தடையாக இல்லாமல், தங்களைச் சார்ந்தோருக்கும் பெரும் மன உளைச்சலைக் கொடுக்கிறார்கள்.

தங்கள் வெற்றிகளின் பெருமைகளை ஓயாமல் உரைத்தபடியும், தோல்விகளின் வலியில் புலம்பிக்கொண்டும் இருப்பவர்களை நீங்களும் கண்டிருப்பீர்கள். நாம் அப்படி இருக்கலாமா? வெற்றியில் இறுமாந்தும், தோல்வியில் துவண்டும் அலைபாயாமல், வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் இரசித்திருப்போம். நிறைவான மனதோடு வாழ்வோம்.

நன்றி வணக்கம்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2024
## The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

இணைப்பு: 20

## போட்டிகள் பற்றிய உங்கள் கருத்து

அன்புடையீர்!
போட்டிகள் பற்றிய உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். உங்களது கருத்துக்களும் அபிப்பிராயங்களும் எதிர்காலத்தில் எமது போட்டிகளை மேலும் சிறப்பாக நடாத்த உதவும் என்பதை அறியத்தருகின்றோம். உங்கள் கருத்துக்களை நேரடியாகத் தரவிரும்பின் உங்கள் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றைத் தரவும். நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்வோம். நன்றி.

கீழேயுள்ள விடயங்களுக்குச் சரியென நீங்கள் கருதும் இலக்கத்தைத் (கீழே தரப்பட்ட குறிப்பினைப் படித்தபின்) தெரிவுசெய்க.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) போட்டிகள் பற்றி வழங்கப்பட்ட விளக்கம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 2) போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்ட விதம்: | 1 | 2 | 3 | 4 | 5 |
| 3) போட்டிகளை மதிப்பிடும் விதம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 4) போட்டிகளுக்கு வழங்கப்பட்ட கவிதை, பேச்சு | 1 | 2 | 3 | 4 | 5 |
| 5) பொதுவாகப் போட்டிகளின் தரம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6) போட்டியிற் பெற்றோரின் ஒத்துழைப்பு | 1 | 2 | 3 | 4 | 5 |
| 7) இப்போட்டிகளால் மாணவர்கள் அடையும் பயன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 8) மீண்டும் பங்குபற்றவுள்ள விரும்பம் | 1 | 2 | 3 | 4 | 5 |

<u>குறிப்பு:</u> 1 – மிகக்குறைவு, 2 - குறைவு, 3 - மத்திமம், 4 - நன்று, 5 - மிகநன்று.

9) போட்டியிகளிற் காணப்பட்ட குறைகள் அல்லது முன்னேற்றக்கூடிய விடயங்கள்:
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

10) நீங்கள் போட்டிகள் பற்றி வேறு ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

பெயர்: …………………………………..

தொலைபேசி: ………………………….. திகதி:………………………

(குறிப்பு: போட்டிகள் முடிந்தபின் இந்தப் படிவத்தை நிரப்பிப் போட்டிள் நடாத்தும் செயற் குழுவினரிடம் கொடுக்கவும் அல்லது கீழே தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.)

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

இணைப்பு: 21

## Details for competition prizes – The Tamil competition 2024

**A) Gold, Silver & Bronze medals** - தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கம் **(10)** -Aus $500.00 per one competition. 1st, 2nd, 3rd prize winner in National Competitions level.

**B) Memorial / Perpetual Shileds (45)** - Aus $200.00 per Shield & the prizes of the particular competition at state level.

**C) Trophy Prizes (45 competitions)** -Aus.$100.00 as annual contribution for a particular competition at state level from the 2nd year after sponsoring the shield.

**D) Donations for special prizes, certificates and other donations:**
Your nominated amount

We honour all our donors by special mention on the prize giving ceremony souvenir.

---

## Details of your donation:

Name: …………………………………………………………

Address: ………………………………………………………

Phone: ………………………..(H) ……………………..(O) ……………………..(Mobile)

Email: ……………………………………………….

Category (one of the above):…………………………………………………

Preferred name for the Prize: ……………………………………………………………………

…………………………………………………………………………………………………..

Amount: …………………………………………………

Payment method: Cheque / Money Order / Cash

You may draw a cheque in favour of `Tamil competitions' and post it to our official address: P. O. Box 4010, Homebush, NSW 2140.

---------------------------------------- ---------------------------------------
Sponsor's signature Date